பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர்ஆண்டு 2029 மாசி 6 புதன்கிழமை (18-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 72

# குடாநாட்டில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பு

## நடவடிக்கைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 18

யாழ். குடாநாட்டில் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றார்கள். அவர்களது நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

கடந்த ஜனவரி 29 ஆம் திகதி யாழ். குடாநாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் குடாநாட்டில் புலிகளின் நடவடிக்கைகள் சற்று அதிகரித்திருப்பதை வடக்குப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் எல்.பி. பலகல்லவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

எனினும் குடாநாட்டின் பாதுகாப்பு நிலைக்கு பெரும் அச்சுறுத்தல் விடுக்கும் நிலையில் புலிகள் இல்லை என்றும் —

அமைதியை ஏற்படுத்தும் படையினரின் நடவடிக்கைகளுக்கு ஆங்காங்கே புலிகள் நடத்தும் சிறுசிறு தாக்குதல்கள் பெரும் பாதிப்பு எதனையும் ஏற்படுத்தி விடாது என்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலோலியில் நேற்று தேடுதல்!

வடமராட்சி, பெப். 18

புலோலி தெற்கு, புலோலி கிழக்குப் பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதலின் போது பலரும் அருகில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (உ-173)

## தீவகக் கடலில் 45 பேர் கைது!

### விடத்தல்தீவிலிருந்து புறப்பட்டவர்களாம்

யாழ்ப்பாணம், பெப். 18

விடத்தல்தீவுப் பகுதியிலிருந்து படகு ஒன்றில் நேற்று தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகக் கருதப்படும் 45 பேரை கடற்படையினர் வழிமறித்துக் கைது செய்திருக்கின்றனர்.

அவர்களில் ஒருவர் தவிர ஏனையோர் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். அந்த 44 பேரையும் குடாநாட்டில் அவர்களின் உறவினர்கள் மற்றும் வீடுகளுக்கு அனுப்பி வைப்பதற்காக, ஊர்காவற்றுறைப் பொலீஸார் இன்று ஈ.பி.டி.பியினரிடம் அவர்களைக் கையளிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எஞ்சியுள்ள ஒரு நபர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என படையினர் கருதுவதால் அவர் குறித்துத் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது.

## 9 மின் கோபுரங்கள் வவுனியாவில் தகர்ப்பு

அனுராதபுரம்— வவுனியா வீதியில் ஒன்பது பிரதான மின் விநியோக கோபுரங்கள் இனந்தெரியாத குழுவினரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதனால் ஏற்பட்டுள்ள இழப்பு சுமார் இரண்டுகோடி 30 இலட்சம் ரூபாவாக இருக்கும் என்று வவுனியா பிரதம மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

சுமார் 3 மைல் சுற்று வட்டப் பிரதேசத்திற்கான மின் விநியோகம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (உ-9)

## வன்னிவிளாங்குளத்தில் திங்களன்று மோதல்

யாழ்ப்பாணம், பெப். 18

'வெற்றி உறுதி' படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புகள் நேற்று முன்தினம் முற்பகலில் மாங்குளத்துக்குத் தென்மேற்கே வன்னி விளாங்குளத்தில் புலிகளுடன் சண்டையிட்டதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளத்துக்குத் தெற்கே சுண்டிக்குளத்தில் நிலை கொண்டிருந்த படைகள் மீது புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் மாங்குளம் யுத்த நிலைமை குறித்து 'புலிகளின் குரல்' வானொலி தகவல் ஏதும் வெளியிடவில்லை. (உ-9)

### மிருசுவில் தாக்குதலின் போது

## மாணவரை மனித கேடயமாக புலிகள் பயன்படுத்தினராம்!

யாழ்ப்பாணம், பெப். 18

மிருசுவில் வடக்கில் நேற்று முன்தினம் தாம் நடத்திய தாக்குதலின் போது பாடசாலை மாணவரை மனித கேடயமாகப் புலிகள் பயன்படுத்தினர்.

—பலாலி படைத் தலைமையகம் நேற்று அனுப்பி வைத்த செய்திக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

### படைத்தரப்பு குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருப்பதாகப் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் மிருசுவில் வடக்குப் பகுதியில் தேடுதல் நடத்துவதற்காக கடந்த திங்கள் பிற்பகல் 1.00 மணியளவில் கால்நடை ரோந்தாக துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மிருசுவில் வடக்கில் உள்ள தமிழ்க் கலவன் பாடசாலையை நெருங்கிய சமயம் எட்டு வயது முதல் 14 வயது வரையுடைய — சுமார் 75 முதல் நூறு எண்ணிக்கையுடைய — பாடசாலைச் சிறுவர்களைத் துருப்புக்கள் கண்டனர்.

மேற்படி பாடசாலை மாணவர்களை பாடசாலையில் இருந்து கொண்டு வந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிப் போராளி - படைச் சிப்பாய் சடலங்கள் மிருசுவிலில் பரிமாற்றம்

### நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில்!

யாழ்ப்பாணம், பெப் 18

மிருசுவில் வடக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த புலிப் போராளி மற்றும் படைச் சிப்பாயின் சடலங்கள் மிருசுவில் பகுதியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் ஏற்பாட்டில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இத்தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் காணாமல் போயிருந்தார். புலிகள் தரப்பில் உயிரிழந்த ஒருவரின் சடலம் படையினரால் கைப்பற்றப்பட்டு பொலீஸாரினால் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்றுக் கையளிக்கப்பட்டிருந்தது.

காணாமல் போனதாகக் கருதப்பட்ட சிப்பாயின் சடலம் புலிகள் வசம் இருப்பதாகத் தெரியவந்ததை அடுத்து இருதரப்புக்கும் இடையில் சடலங்களைப் பரிமாறிக் கொள்ளும் ஏற்பாட்டில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகம் ஈடுபட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து நேற்றுப் பிற்பகல் புலிப் போராளியின் சடலத்தை பொறுப்பேற்றுக் கொண்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப்பிரதிநிதிகள் பிற்பகலிலேயே மிருசுவில் பகுதிக்கு அதனை எடுத்துச் சென்று அங்கு வைத்து புலிக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவிலில் பத்துப் படையினர் பலி எனப் புலிகள் அறிவிப்பு!

தென்மராட்சி, பெப். 18

நேற்று முன்தினம் மிருசுவில் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

சுமார் முப்பது இராணுவத்தினர் வீதித் தடைகளை அகற்ற வந்தபோது அவர்களைச் சுற்றி வளைத்து புலிகள் தாக்கியதாகவும்—

### தமது தரப்பில் இருவராம்

இத்தாக்குதலில் பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட ஏனையோர் தப்பியோடி விட்டதாகவும்— 'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

ஜி. சீ. ஈ [உயர்தர] பரீட்சையில்

பாடசாலைகள் பெற்ற முன்னணிப் பெறுபேறுகள் விவரம்

நாளைய உதயனில்!

## தட்டாதெரு தடைமுகாமில் கட்டுப்பாடுகள் தளர்வு

யாழ்ப்பாணம், பெப். 18

தட்டாதெரு தடை முகாமில் போக்குவரத்துக் கட்டுப்பாடு தற்போது தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் தட்டாதெருச்சந்திக்கு அப்பாலுள்ள பிரதேசங்களிலும்வலிமேற்கு, வலி வடக்குப் பகுதிகளிலும் வசிக்கும் பொதுமக்கள் யாழ். நகருக்குள் நுழைவதற்கான — ஒரு வழிப் பாதையாக — தட்டாதெருச்சந்தி தடைமுகாம் இருந்துவந்தது தெரிந்ததே.

தற்போது நேற்று முன்தினம் தொடக்கம் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் பாதசாரிகளும், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை கொல்லங்கலட்டி
## பிள்ளையார் கோயில், சிவன் கோயில்
### அறிவித்தல்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பக்தர்கள் சென்று வழிபட அனுமதி கிடைத்துள்ளது. சதுர்த்தி, மகா சிவராத்திரி போன்ற தினங்களில் வழிபடச்செல்ல விரும்புவோர் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்தில் என்னைச் சந்தித்து அடையாள அட்டை இலக்கங்களைப் பதியுமாறு வேண்டுகிறேன்.

ஸ்ரீலஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்
அறங்காவலர்.
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை. (53460)

---

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா?
நீங்களும் பட்டதாரியாகலாம் —
பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின்
வெளி நிலைப் பட்டப் பாடநெறிகளான

## கல்வியாண்டு 98/99

★ கலை முதற்தேர்வு (G. A. Q.)
★ வணிக முதற்தேர்வு (F. I. C.)
★ விஞ்ஞான முதற்தேர்வு (G. S. Q.)
(கணிதமும், புள்ளிவிவரவியலும்)

க. பொ. த. உயர் தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தையும் விவரத் திரட்டையும் ரூ 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம்பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 16-2-98 இல் இருந்து 2-3-98 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விரிவுரைகள் 7-3-98இல் ஆரம்பமாகின்றன

உதவிப் பதிவாளர்,
## பட்டப்படிப்புகள் கல்லூரி
ஸ்ரான்லி வீதி, (மக்கள் வங்கி அருகில்)
யாழ்ப்பாணம். (53465)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவி அபிராமியின் அன்புத்தந்தை
### சுப்பிரமணியம் இராசரட்ணம்
அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த துயரடைவதுடன், அவரின் குடும்பத்தினர்களுக்கு எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

98 வர்த்தகபிரிவு மாணவர்கள்
பொஸ்கோ கல்வி நிலையம்.
(53466) யாழ்ப்பாணம்.

---

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் இராஜரட்டினம்
(நடராசா)
(Retd. Legal Draughtsman Transilator)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராஜரட்டினம் காலமானார்.

அன்னார் மல்லிகா இராஜரட்டினம் அவர்களின் (Architect (U. D. A) நகர அபிவிருத்திச் சபை) அன்புக் கணவரும், அபிராமி, சியாமளா (சுண்டுக்குளி மகளிர் மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 17-02-98) நல்லூரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ம. இராஜரட்டினம்
(மனைவி)
82/3, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (53464)

### சின்னவன் வேலாயுதம்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது உரும்பிராயில் வசித்தவருமாகிய சின்னவன் வேலாயுதம் 16-02-98 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் 18-02-98 பிற்பகல் 2-00 மணியளவில் உரும்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. இராசரத்தினம்
(மருமகன்)
பலாலி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (53457)

---

## A/L Day Class

கலை, வர்த்தக
கணித வகுப்புகள்
ஆரம்பமாகியுள்ளன.

★ O/L, yr 10, 9&8
★ புலமைப்பரிசில் '98

**SHAMROCK**
(53449)

---

நெல்லியடி
## மஹாத்மா
## வெண் திரையில்

இன்று முதல்
விஜயகாந்த் - மீனா
நடித்த
### உளவுத்துறை
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2765)

---

## லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
இன்று மட்டும்
விஜயகாந்த் நடித்த
### உளவுத்துறை

தியேட்டர் திரை பெரிதாகத் திருத்தி அமைக்க வேண்டியிருப்பதால் வியாழன் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது.

வெள்ளி மட்டும்
எம். ஜி. ஆர். நடித்த
### உலகம் சுற்றும் வாலிபன்
பழைய நேரம்
10-30. 2-30.
(53059)

---

## தேவை

யாழ். நகரில் மீன் பிடி உபகரணம் விற்கும் ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை இரு பாலாரும் 28-02-98 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 699
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.
(53459)

---

## மனதார
## வாழ்த்துகின்றோம்

எமது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும், சிரேஷ்ட புவியியல் பேராசிரியருமாகிய
### பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
அவர்கள்
அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவியேற்றமையிட்டு உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புவியியற்றுறை மாணவர்கள்
புவியியற்கழகம்
யாழ். பல்கலைக்கழகம். (53463)

---

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
### கந்தரோடை, சுன்னாகம்.

1997 A/L சிறந்த பெறுபேறுபெற்ற பின்வரும் மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும், கல்லூரி முதல்வரையும் வாழ்த்துகின்றோம்.

### கலை

| | | | |
|---|---|---|---|
| 1. | ம. ரஜிபாலா | — | 2A 2B |
| 2. | பு. பாலேந்திரா | — | 2A BC |
| 3. | கு. சிபாஷனி | — | 2A BC |
| 4. | த. சிபரூபி | — | 2A BC |
| 5. | நா. நிஷாந்தன் | — | A 3B |
| 6. | சி. சிவமைந்தன் | — | A 2BC |
| 7. | ஏ. தனேஸ்வரன் | — | A 2BC |
| 8. | இரா. கௌசல்யா | — | A 2BC |
| 9. | கு. ஜமுனா | — | A 2BC |
| 10. | ச. சஜிதா | — | A 2BC |
| 11. | சி. சிவகாந்தினி | — | A 2BC |
| 12. | இரா. கிருஸ்ணமேனன் | — | AB 2C |
| 13. | க. உதயகுமார் | — | AB 2C |
| 14. | வே. கருணாவதி | — | AB 2C |
| 15. | பு. சசிரஜனி | — | AB 2C |
| 16. | சி. சிவாஜினி | — | AB 2C |
| 17. | அ. ரேவதி | — | AB 2C |
| 18. | ந. சுஜாதா | — | AB CS |
| 19. | செ. சத்தியகுமார் | — | AB CS |
| 20. | செ. அரியமலர் | — | A 3C |
| 21. | அ. சகிலா | — | A 2CS |
| 22. | சி. விகிகனதாஸ் | — | A 2CS |
| 23. | தி. திருமகள் | — | AB 2C |
| 24 | ப. பவளராஜ் | — | A 2C |

### வர்த்தகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | அ. ராஜினி | — | 2A 2B |
| 2. | இரா. கமலலோஜினி தேவி | — | 3A C |
| 3. | க. நேதானந்தன் | — | 3A C |
| 4. | கு. பிரதீபன் | — | A 3B |
| 5. | ந. ஜெனதன் | — | A 2BC |
| 6. | நே. நிஷாந்தன் | — | 2B 2C |
| 7. | சி. கஜன் | — | 4B |
| 8. | சு. யஸ்தன் | — | 3B C |
| 9. | இ. பிரசன்னா | — | 3B C |

### விஞ்ஞானம்

| | | | |
|---|---|---|---|
| 1. | சா. செந்தில்குமார் | — | 2A BC |
| 2. | பா. சுவர்ணதாசன் | — | B 2CS |
| 3. | இரா. குயிலினி | — | B 3C |
| 4. | தே. சேத்திரபாலன் | — | 3C S |

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
(சி/2910) கந்தரோடை, சுன்னாகம்.

---

## யாழ். நகரில்!
## புதிய இடத்தில் பெட்டா!

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகை, பிஸ்கட், இனிப்பு, பீடா, ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகலவிதமான மூலப்பொருள்களுக்கும்

ஊதுபத்தி, சாம்பிராணி, வாசனைத் திரவியம், ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம், குங்குமப்பூ, எண்ணெய், நெய், பிஸ்கட், சொக்லேட், சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள், டொபி வகைகள், எசன்ஸ் வகைகள், எமல்சன் வகைகள், கலர் பவுடர் வகைகள், கேக் தயாரிக்கும் பொருள்கள், கேக் அலங்காரப் பொருள்கள், அச்சகத்துக்குத் தேவையான காகிதாதிகள், மை வகைகள்

ஆகியவற்றுக்கு யாழ். நகரில் பெயர்பெற்றவர்கள்:

## பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்
## &
## பேப்பர் மேர்ச்சன்ட்

இல. 104(298), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/2909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவையில் நேற்றும் குண்டு வெடித்தது!

## விளையாட்டு மைதானத்தில் 4 சிறுவர் பலி!

சென்னை பெப். 18

தமிழ்நாடு கோயம்புத்தூரில் நேற்றும் குண்டுஒன்று வெடித்தது.

மைதானம் ஒன்றில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த நான்கு சிறுவர்கள் இந்தச் சம்பவத்தின்போது கொல்லப்பட்டனர்.

தொடராக இடம் பெற்ற இக் குண்டுவெடிப்புக்களில் ஏற்கனவே 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக பலவதந்திகள் பரப்பப் பட்டுள்ளதாகவும் இவற்றை நம்பவேண்டாம் என்றும் கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளர் கோரியுள்ளார்.

வதந்திகளே தற்பொழுதுள்ள பெரிய பிரச்சினை என்றும் அவர் கூறினார்.

அதே சமயம் கோயம்புத்தூர் குண்டுவெடிப்புக்களுக்கு ஐரோப்பிய நாடுகள் சில காரணமாகி இருக்கலாம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதிகுற்றஞ்சாட்டி உள்ளார்.

பாரதீய ஜனதாத் தலைவர்களில் ஒருவரான எல். கே. அத்வானி கோயம்புத்தூர் வந்த சமயம் விமான நிலையம் உட்பட அவர் பயணம் செய்யும் சகல இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாகவும் கருணாநிதி கூறினார்.

குண்டு வெடிப்புக்களுக்கான பொறுப்பை தி. மு. க. அரசே ஏற்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி தெரிவித்த குற்றச்சாட்டை கருணாநிதி நிராகரித்தார். (இ)

## ஓடு பாதையிலிருந்து விலகி வீடுகளைத் தகர்த்த விமானம்

### 200க்கும் மேற்பட்டோர் தைவானில் பலி

தைவான் பெப். 18

தைவானில் இடம் பெற்ற விமான விபத்து ஒன்றில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்துவிட்டார்கள்.

ஓடு பாதையில் இறங்க வேண்டிய விமானம் சறுக்கி வீடுகளைத் தகர்த்து உடனடியாகவே தீப்பற்றிக் கொண்டது.

இந்தோனேசிய உல்லாசப் பயணிகளுடன் மாலை தீவில் இருந்து வந்துகொண்டிருந்த இந்த விமானத்தில் 162 பயணிகளும் 14 பணியாளர்களும் இருந்தனர்.

விமானம் வீழ்ந்து நொருங்கிய வீட்டில் இருந்த குழந்தை ஒன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

இவ் விமானத்திலிருந்த கறுப்புப் பெட்டி கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த விமான விபத்தின்போது தரையில் இருந்த ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். (இ-9)

## சதாமுக்கு ஆதரவாக பேரணி

பாக்தாத் பெப். 18

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்னுக்கு ஆதரவு தெரிவித்து ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீன அகதிகள் தெற்கு லெபனானில் பேரணி ஒன்று நடத்தினர். (இ)

## உடல் உறுப்புக்களை விற்கும் தென்கொரிய மக்கள்

சென்னை, பெப். 18

தென்கொரியாவின் பொருளாதார நெருக்கடி மக்களை மிகவும் துயரமான பேராபத்துக்குள் தள்ளி விட்டுள்ளது.

உடல் உறுப்புக்களை விற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் தென்கொரியாவில் பல மக்கள் கள்ளச் சந்தையில் தமது உடல் உறுப்புக்களை விற்க முனைகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறுநீரகங்களை விற்க பலர் முன்வருவதாக பல்கலைக்கழக மருத்துவர் ஒருவர் கூறுகின்றார்.

தென்கொரியாவில் நெருக்கடி தொடங்குவதற்கு முன்பிருந்ததை விட தற்போது 5 மடங்கு மக்கள் சிறுநீரகங்களை விற்க முன்வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-9)

# மத்தியில் மீண்டும் கூட்டாட்சியே வரும்

## மூப்பனார் கூறுகின்றார்

சென்னை, பெப். 18

மக்களவைத் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காது மத்தியில் கூட்டணி ஆட்சிதான் ஏற்படும் இவ்வாறு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி. கே. மூப்பனார் தெரிவித்தார்.

"நம் நாட்டில் தனிக் கட்சி ஆட்சிக்கு" வந்தது இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி காலத்துடன் முடிந்துவிட்டது. கடந்த தேர்தலைப் போல இத்தேர்தலிலும் மத்தியில் கூட்டணி ஆட்சிதான் ஏற்படும்.

முன்னைய தேர்தலில் ஊழலை ஒழிப்போம் என்று வாக்குக் கேட்டோம். எங்கள் கூட்டணியை வெற்றி பெறச் செய்தீர்கள். உங்களிடம் கூறிய படி தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் மீதான வழக்குகள் இன்னமும் நிலுவையில் உள்ளன. தீர்ப்பு வந்தபின்னர் அவர்களுக்கு வாக்கு அளிக்கலாமா? வேண்டாமா? என்று முடிவு செய்யுங்கள். அதற்கிடையில் வந்து வாக்குக் கேட்பவர்களுக்கு தகுந்த பாடம் புகட்டுங்கள்.

சிறையில் இருந்ததாகக் கூட்டங்களில் பேசி வருகிறார் ஜெயலலிதா மறைமலை நகர் ரயில் நிலையத்திற்கு காமராஜர் பெயர் வைக்க வேண்டும் என்று நாங்கள் போராட்டம் நடத்திய போது என்னையும் கருணாநிதி சிறையில் அடைத்தார். இது அரசியல் ரீதியிலான நடவடிக்கை. ஆனால் ஜெயலலிதா ஊழல் செய்ததால் சிறை சென்றார். இவற்றில் உள்ள வித்தியாசத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஊழல் புரிந்த ஜெயலலிதாவை நாடு கடத்த வேண்டும் என்று கூறிய ராமதாஸ் தற்போது அ.தி.மு.க.வுடன் கூட்டு வைத்துள்ளார். தேர்தல் ரிக்கெட்டுக்காக வாழப்பாடி ராமமூர்த்தி தனிக்கட்சி தொடங்கினார் எப்போதும் ரிக்கெட் அதிகம் கொடுப்பவர்கள் பக்கம் சேர்ந்து விடுவார் சுப்பிரமணியசுவாமி.

ஜெயலலிதா மீது வழக்குத் தொடர்ந்து அவரைத் தூக்கிலிட வேண்டும் என்று கோரி கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரை நடைப் பயணம் சென்றார் வை. கோபாலசாமி. இவர்கள் எல்லாம் கொள்கை அரசியல் நடத்துவதாகக் கூறுவது தான் வேடிக்கையாகவுள்ளது.

இந்துமதத்தத்துவத்தைப் பற்றி பாரதிய ஜனதா கட்சி பேசிவருகிறது. பிறமதங்களை மதிக்கும் தன்மை உள்ளது தான் இந்துமதம். அடிப்படைவாதங்களுக்கு துணை போகக் கூடாது. நிலையான ஆட்சி அமைப்போம் என்று கூறி பாஜக வாக்குக் கேட்கிறது. ஐக்கிய முன்னணியால் மட்டுமே நிலையான நீதியுடன் கூடிய நியாயமான ஆட்சியைத் தர முடியும். இந்த முறை அதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆங்கிலப் பத்திரிகையொன்றின் கருத்துக்கணிப்பில் பாஜகவின் கொள்கைகள் மேல் தட்டு மக்களை மட்டும் சென்றடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஐக்கிய முன்னணியின் கொள்கைகள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

நாடு விடுதலையடைந்து 50 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழகத்திலிருந்து தாழ்த்தப்பட்ட ஒருவர் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றார். மத்திய அமைச்சர்களாக இருந்த ப. சிதம்பரம் மற்றும் முரசொலிமாறனால் நம் நாடு உலகளவில் பெருமை அடைந்துள்ளது.

இப்படி அவர் கூறினார்.

இந்தியச் செய்திகள்

## நவாஸ் ஷெரீப் சீனாவுக்கு விஜயம்

பீஜிங். பெப். 18

சுமார் 100 பேர் அடங்கிய வர்த்தகத் தூதுக்குழு ஒன்றுக்குத் தலைமையேற்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் சீனா சென்றடைந்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது விவசாயம், தொழிற்றுறை, தொழில் நுட்பம் ஆகியன தொடர்பான பல உடன்படிக்கைகள் இரு நாடுகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட உள்ளன.

சீனா அதன் பொருளாதாரத்தில் கண்டுள்ள வளர்ச்சியில் இருந்து நாங்கள் எவ்வளவோ கற்றுக் கொள்ள முடியும் என்று பிரதமர் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கும், சீனாவுக்கும் இடையிலான அரசியல் உறவுகள் நல்ல முறையில் நிலவி வருகின்றன.


தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்

★ போட்டோ பிரதிகள்
★ லமினேட்டிங் (கவரிடுதல்)

நாடவேண்டிய இடம்:

அருண்

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



★ மலிவு விலையில் ★

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

லீலா கலண்டர்கள், டயறிகள்

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் கலண்டர்களை கொழும்பு விலையிலும் 15 வீதக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு விலை 100 ரூபா

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

பாம்ஸ்
பஸ் நிலையம், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு மாணவர் குறித்தும் ஆசிரியர் அறிந்திருக்கவேண்டும்

## கல்வி அபிவிருத்தி மாநாட்டில் உரை

பருத்தித்துறை, பெப். 18

''எங்கள் தமிழ்ப் பகுதி பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகள் பல் வேறுபட்டவைவகுப்பறையில் பல இக்கல்கள் உண்டு. மாணவர் மத்தியில் தோற்றம், கல்வித்தரம், குடும்பநிலை, பொருளாதாரநிலை, மனப்பாங்கு வளர்ச்சி ஆகிய பல் வேறு அம்சங்களின் வேறுபாடுகளை நாம் காண்கின்றோம். அதனால் ஆசிரியர் கற்பிக்கும் போது தனியாள் வேறுபாடுகளை அவசியம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்''.

இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி மாநாட்டில் உரையாற்றிய வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமிகுறிப்பிட்டார்.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட மூன்றாண்டு அபிவிருத்திச் செயற்திட்டத்தை உருவாக்கும் வேலையில் பாடசாலை அதிபர்கள், அதிகாரிகளை அழைத்து நிலைமைகளை விளக்கினோம் கருத்துக்களை முன்வைத்தோம்.

அதன் பின்னர் கல்விச் சமநிலையை ஏற்படுத்தும் நோக்கில் கீழ்மட்டத்தில் உள்ள பாடசாலைகளை உயர்நிலையை நோக்கி எடுத்துச் செல்வதன் மூலம் சமநிலையை ஏற்படுத்த முனைந்தோம்.

பாடத்திட்டத்தோடு இணைந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பயிற்சிகள், ஆலோசனைகள் உதவிகள் ஆகியவற்றை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

(இ118)

## வாகன சேவை

செம்பியன்பற்று, பெப். 18

வடமராட்சி கிழக்கு மாமுனையில் இருந்து சாவகச்சேரிக்கு புதிதாக வாகன சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 8-30 மணிக்கு மாமுனையில் இருந்து புறப்பட்டுச் செல்லும் இந்த வான் சாவகச்சேரியில் இந்து 2-30 மணிக்குத் திரும்பி வருகிறது.

(ஐ-63)

## புதிய கட்டடம்

யாழ்ப்பாணம் பெப். 18

மீசாலை தென்மேற்கு சிக்கன சேமிப்பு கடனுதவி கூட்டுறவுச் சங்கத்திற்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா இம்மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது.

மேற்படி சங்கத்துக்குச் சொந்தமான காணித்துண்டில் புதிய நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட இருக்கிறது.

(இ-4)

## புலோலியில் சுற்றிவளைப்பு

நெல்லியடி, பெப். 18

புலோலிகிழக்குபுலோலிதெற்குகிராமசேவையாளர்கள் பிரிவிலுள்ள பலபகுதிகள் நேற்று செவ்வாய் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அதிகாலை 5 மணிமுதல் காலை 9 மணிவரையும், வீதிகளிலும் சந்திகளிலும் நூற்றுக்கணக்கான படையினர் கடமையில் ஈடுபட்டதுடன், வீதியால் சென்றோர் கடுமையா சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

பின்பு இப் பகுதிகளிலுள்ள வீடுகளிலிருந்து பலர் அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, விடுவிக்கப்பட்டனரென்று தெரிவிக்கப்படுகின்றது.

(இ-109)

## பிற்போடப்பட்டது

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்ற நிதியுதவிக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் 18-02-1998இற்கு பதிலாக 18-03-1998 இற்கு பிற்போடப்பட்டுள்ளது.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(53455)

## வாழ்த்துகின்றோம்

நீண்டகால இடைவெளியின் பின் 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, பாடசாலைக்கும், கிராமத்திற்கும் பெருமை தேடித் தந்த

1. தி. உஷாநந்த்
2. செ. சங்கீதா

ஆகியோரை வாழ்த்துவதோடு, அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும், வழிகாட்டிய அதிபரையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/புன்னாலைக் கட்டுவன்
அ. த. க. பா.
சுன்னாகம்.

[53453]

# பாடசாலைகள் திறம்பட இயங்க அதிபருக்குச் சமூக உறவு அவசியம்

## முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம் சொல்கிறார்

நல்லூர், பெப். 18

சமூக உறவற்ற பாடசாலைகள் திறமையாக இயங்க முடியாது. நான் வளர்த்துக் கொண்ட சமூக உறவு காரணமாக பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கங்களின் முழு ஒத்துழைப்பும் கிடைத்தது. அதன் மூலம் பாடசாலையின் வளர்ச்சிக்கு என்னால் இயன்ற பணிகளைச் செய்யக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு யாழ. இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் கூறினார்.

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பஞ்சலிங்கத்தின் பணியினைப் பாராட்டும் விழாவும், ''பஞ்ச அமிர்தம்'' நூல் வெளியீடும் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்ட இந்த விழாவுக்கு சிரேஷ்ட மாணவ முதல்வர் ச. திருக்குமரன் தலைமை வகித்தார்.

பஞ்சலிங்கம் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

ஒரு நண்பனை தொடர்ந்து இருமாதங்கள் காணாவிடில் மறந்துவிடும் உலகத்தில் இரண்டு வருடங்களாகியும் என்னை நினைவில் நிறுத்தி நன்றி செலுத்துவது மகிழ்ச்சியளிக்கிறது. கற்பித்தல், கற்றலுக்கான சூழலை ஏற்படுத்துவது அதிபரின் கடமை என்பதை நான் கற்பித்த பாடசாலை அதிபர்களின் அனுபவங்களின் ஊடாகத் தெரிந்து அவ்வழியில் எனது பணிகளைச் செய்தேன். எனது பதவிக் காலத்தில் பிற கல்லூரிகளிலும் பார்க்க மாணவர்கள் சுதந்திரமாக இயங்கும் தன்மையை உருவாக்கியதுடன் அவர்கள் எல்லை மீறாது கண்காணிக்கும் பொறுப்பை ஆசிரியர்களிடம் வழங்கினேன்.

பலம் வாய்ந்த பின்னணியின் உதவியுடன் கொண்டு வரப்பட்ட இருநேரப் பாடசாலை என்ற பிறர் கஷ்டங்களை உணராமல் செயற்படுத்த முனைந்த திட்டத்திற்கு எதிராக இந்துக் கல்லூரிமாணவர்கள் பெற்ற வெற்றிக்குக் காரணம் மேற் கூறிய தன்மையே.

இதில் மாணவர்களின் ஆளுமை நனகு வெளிப்பட்டது மாணவர்கள் கற்றலுடன் மட்டும் நிற்காது ஏதாவது ஒரு நிகழ்வில் பங்கு பற்ற வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தை என்னால் ஏற்படுத்த முடிந்தது. இன்று ஒரு சிறப்பான விழாவை நடத்தி என்னைக் கௌரவித்தமைக்காக அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் ஏனைய பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்— என்றார்.

செல்வன் திருக்குமரன் தமது தலைமை உரையில் கூறியதாவது:

தலைமைத்துவம், விளையாட்டு, சஞ்சிகைத்துறைப் பயிற்சிகளிலும் சிறந்து விளங்கும் சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதால் கல்வியில் மட்டுமன்றி இதர துறைகளிலும் மாணவர்களுக்கு எமது கல்லூரியின் மூலம் பயிற்சிகளை வழங்க எமது முன்னைய அதிபர் அவர்கள் எடுத்த முயற்சி இக்கல்லூரியின் பெருமைக்குச் சான்றாக அமைந்தது.

அவரது உழைப்பால் பல்கலைக்கழக அனுமதியில் சாதனைபடைத்தது எமது கல்லூரியின் பதினெட்டாவது அதிபராகக் கடமையேற்ற அவர் கல்விச் சமூகத்திற்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது — என்றார்.

### உயர்கல்வி கட்டாயம்

இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தமது உரையில் கூறியதாவது:-

யாழ். குடாநாட்டின் கல்வி புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்றவற்றில் ஆழ்ந்த புலமைமிக்க முன்னாள் அதிபரின் சேவை நமக்குத் தேவை. ஆங்கிலப் புலமைபெற்ற கல்வியாளரின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதால் எமது பல்கலைக்கழகம் அவரைப் பகுதி நேர விரிவுரையாளராக்கிக் கொண்டது.

மாணவர்களின் எதிர்காலச் சிறப்பிற்கு தன்னை அர்ப்பணித்த அவரது சேவையால் வடபிரதேசத்தினதும் இலங்கைத் தமிழர்களினதும் கல்விப் பாரம்பரியத்தை இந்துக்கல்லூரி தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. இந் நிலை தொடர வேண்டும் பழைய மாணவர் சங்கம் இதற்கான தொடர்ந்து முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

இருபத்தியோராம் நூற்றாண்டில் பிள்ளைகளுக்குக் கட்டாயம் உயர்கல்விதேவை. இந்தப் பிரதேசத்தின் கல்விக்காக ஓய்வு பெற்ற பின்னரும் பணியாற்றுவது மாணவரின் அதிர்ஷ்டமாகும்.

கஷ்டமான காலத்தில் இந்துக்கல்லூரியின் உயர்வுக்கு காரணமான பஞ்சலிங்கம் அவர்கள் தமது சேவைக் காலத்தின் இறுதியில் இந்துக் கல்லூரியின் அதிபராகப்பதவியேற்றது இந்துக்கல்லூரியின் அதிஷ்டமே — என்று அவர் சொன்னார்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ. சிறிக்குமரன் பேசும் போது கூறியதாவது:

மோசமான நாட்டுச் சூழலில் நமது மாணவர்களின் கல்வி பாதிக்கக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த அதிபர் பஞ்சலிங்கம் நோயுற்ற காலத்தில் கூட இக் கல்லூரி பற்றியே சிந்தித்தவர். விளையாட்டு மற்றும் நூலக சேவைகளை விரிவாக்கி பல துறைகளிலும் பயனுள்ள மாணவர்களை இந்த மண்ணிற்குத் தர வேண்டும் என்று செயற்பட்டவர் அவர்— எனக் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் க. குணராசா 'பஞ்ச அமிர்தம்' நூலை வெளியிட்டு உரையாற்றினார்.

பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலர் பி. இராஜேஸ்வரன், பிரதி அதிபர் பொ. மகேஸ்வரன், ஆசிரியர் செ. தவராஜா, மாணவர்கள் யோ. சிவாகரன், இ. ஆரூரன், வி. கிருபாகரன், சு. கௌசிகன், லோ. துஷிகரன் ஆகியோரும் பேசினார்கள்.

ஆசிரியர்கள், மாணவர்கள், அபிமானிகள் முன்னாள் அதிபரை மலர் மாலை சூட்டிக் கௌரவித்தனர்.

முன்னதாக இந்துக் கல்லூரி ஞான வைரவர் கோயிலில் விசேட பூசைகள் இடம் பெற்று மங்கள வாத்தியம் இசைக்க மாணவர்களின் அணிவகுப்பு மரியாதைகளுடன் முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

(அ-[illegible])

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் கார்த்திகேசு குணவர்த்தனம்

[முன்னாள் பிரபல வர்த்தகர், கல்கமுவ]

வையகத்தில்: 20 — 4 — 1922 வானுலகில்: 20 — 01 — 1998

20-01-1998 ஆம் திகதி சிவபதமடைந்த எம் குடும்பத் தெய்வத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

19-02-98 வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரது அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர் ஆகியோரைக் கலந்து, அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

அரவிந் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.

(53454)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலதாமாளிகை குண்டுவெடிப்புக்கு அரசின் நடவடிக்கைகளே காரணம்

## விக்கிரமபாகு கருணாரத்தின குற்றச்சாட்டு

வவுனியா, பெப். 18

தலதா மாளிகைக் குண்டு வெடிப்புக்கு அரசின் செயற்பாடுகளே காரணம் என நவ சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலர் விக்கிரமபாகு கருணாரத்தின தெரிவித்தார்.

இக் குண்டு வெடிப்புக்குப் புலிகள் காரணம் என அரசு குற்றம் சாட்டுகின்றது. இது ஆதாரமற்ற — எழுந்தமானமான — முடிவாகும்.

எனினும் இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு அரச செயற்பாடே காரணம் என்று கூறலாம்.

தமிழரின் ஆலயங்கள், புனித இடங்கள், கலாசாரங்கள் என்பனவற்றை அரசு அழித்தது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகள், ஆளும் உரிமை ஆகியவற்றை அரசு மறுத்தது. யுத்தத்தை அது தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டது.

தலதா மாளிகைக் குண்டு வெடிப்பை அநியாயம் எனக் கூற அரச பக்கம் எந்த நியாயமும் இல்லை.

இது போன்ற குண்டு வெடிப்புக்கள் இடம்பெறுவதை இனிமேல் தவிர்க்க வேண்டுமானால் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அரசியல் தீர்வை உடனடியாக ஏற்படுத்த அனைவரும் ஒன்றிரள வேண்டும்.

யுத்தம் நிறுத்தப்படாது விட்டால் இனிமேல் நடக்கப் போவதை தவிர்க்க முடியாது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-9)

# இக்பால் அத்தாஸ் விவகாரம்; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

கொழும்பு, பெப். 18

சிரேஷ்ட பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸை பயமுறுத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சுதந்திர வெகுஜன தொடர்பு இயக்கம் ஜனாதிபதிக்கும் வெகுஜன தொடர்பு அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கிடையில் இலங்கையில் தொழில்புரியும் பத்திரிகையாளர் சங்கம் இக்பால் அத்தாஸ் மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் மேற்கொள்ளப்பட்ட பயமுறுத்தல் நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

(இ-9)

# பனை, தென்னை அபிவிருத்தி கூ. ச. செயற்பாடுகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 18

வன்னியில் தொடரும் போர் நடவடிக்கையினால் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தமது தொழிற்பாட்டை முழுதாக நிறுத்திவிட்டதாக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இச்சங்கங்களில் பணியாற்றும் சுமார் 3 ஆயிரத்து 500 ஊழியர்களின் நிலையும் கேள்விக்குறியாக உள்ளது.

பனை மற்றும் தென்னைகள் இராணுவ நடவடிக்கையின் போது அழிக்கப்பட்டுள்ளன என்று ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(இ-5)

# குளம் ஆழமாக்கப்பட்டதால் விளைச்சல் இம்முறை அதிகம்

வலிகாமம் தெற்கு, பெப். 18

உடுவில் குளத்தின் வாய்க்கால்கள் ஆழமாக்கப்பட்டதால் கடந்த காலபோகத்தின் போது உடுவில் வயல் வெளிகள் வெள்ள அபாயத்தில் இருந்து காப்பாற்றப் பட்டதுடன் விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலையும் கொடுத்துள்ளது.

குளத்தின் வாய்க்கால்களை ஆழமாக்க நிதி உதவி வழங்கிய உடுவில் பிரதேச செயலர், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஆகியோருக்கு உடுவில் வடக்கு விவசாயிகள் சம்மேளனம் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளது.

உடுவில் குளவாய்க்கால்களை ஆழமாக்கி புனரமைப்பதற்கும் உடுவில் குளத்தில் இருந்து கந்தரோடை ஊடாக செல்லும் கழிவு நீர் வாய்க்காலை புனரமைப்பதற்கும் உடுவில் பிரதேச செயலர் பிரிவின் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

(இ-152)

## மாணவர்களின் நலன் கருதி

# மருதங்கேணியில் மாலை நேர வகுப்பு

செம்பியன்பற்று பெப். 18

வடமராட்சி கிழக்குப்பகுதி மாணவர்களின் நலன் கருதி நீண்டகால இடைவெளியின் பின்னர் மருதங்கேணிப் பகுதியில் உள்ள பொது மண்டபம் ஒன்றில் இப்பகுதி ஆசிரியர்களால் மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் இங்கு கற்பிக்கப் படுகின்றன. இதனால் பாதுகாப்பு அரணுக்கு உள்ளே தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், நாவலடிப்பகுதி மாணவர்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர்.

(ஐ-36)

# மஞ்சத்தொடுவாய் வாவியில் இளைஞனின் அழுகிய சடலம்

மட்டக்களப்பு, பெப்,18

மட்டக்களப்பில் இருந்து 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மஞ்சத் தொடுவாய் வாவியில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கண்டெடுக்கப்பட்டது.

சடலம் அழுகிய நிலையில் இருப்பதால் இனங்காண முடியாமலுள்ளது.

இவரின் உடலின் இரு சூட்டுக்காயங்கள் இருப்பதாகவும் எனினும் சயனைட் அருந்தியே இவர் இறந்துள்ளார் என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணையின் போது சட்டவைத்திய அதிகாரி சந்திரபாலன் மரணமானவரின் இரைப்பையையும் இரத்தத்தையும் எடுத்து இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்பியுள்ளார்.

இரசாயனப் பரிசோதனை முடிவுகள் வந்த பின்னரே இவரின் மரணம் தொடர்பான தீர்ப்பை வழங்கமுடியும் என்று மட்டக்களப்பு பதில் மாவட்ட நீதிபதி கே. தங்கவேல் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

# விண்ணப்பமுடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பம் கோரப்பட்டிருந்த பட்டமேற்கல்வி டிப்ளோமா, சட்டத்துறையியல் ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 21 ஆம் திகதி சனி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பப்படிவங்களைப் பெற்றவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் உள்ள இணைப்பு நிலையத்திலும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் உள்ள இணைப்பு நிலையத்திலும் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

(இ-7)

## தையல் பயிற்சி

வேலணையில் இந்த ஆண்டுக்கான தையல் பயிற்சி நெறிகள் இன்று புதன்கிழமை ஆரம்பிக்கப்படும் என உதவி அரசாங்க அதிபர் ஆ. தியாகராசா தெரிவித்தார்.

(இ-103)

## நித்திரையில் பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், பெப். 18

வீட்டினுள் உறங்கிக்கொண்டிருந்தவரை பாம்பு தீண்டிய சம்பவம் நீர்வேலியில் இடம் பெற்றது.

இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நடராசா பகீரதன் (வயது16) என்பவரே பாம்பினால் கடியுண்டவர் ஆவார்.

(இ-139)

# கிளிநொச்சி கூட்டுறவுச் சங்கங்களின் அவலநிலை குறித்து மகஜர்

யாழ்ப்பாணம், பெப். 18

கிளிநொச்சி மாவட்ட பல. நோ. கூ. சங்கங்கள் ஏனைய சகோதர சங்கங்கள் ஆகியவை எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் — பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமையையும் — விளக்கி வடக்குக்கான மீள்குடியேற்ற புனர் நிர்மாண அதிகார சபைத் தலைவருக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் 26 கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்த ஒன்றியம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

வவுனியா அரசாங்க அதிபர் ஊடாக இம் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டது.

வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரை வவுனியா அரச செயலகத்தில் சந்தித்து இப்பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு வடக்குக்கான மீள் குடியேற்ற புனர் நிர்மாண அதிகார சபைத் தலைவர் இரு தடவைகள் ஏற்பாடு செய்து சந்திப்புகள் ரத்துச் செய்யப்பட்டன.

இதனையடுத்தே வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை விளக்கி இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் கு. சிறில் தெரிவித்தார்.

சூரியப்பிரகாசம், வெற்றி உறுதி போன்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களின் அவலநிலை நிவாரண வெட்டு, களஞ்சிய இருப்பு இல்லாததால் கூட்டுறவுச் சங்கங்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கும் கொடுப்பனவுகள் சீர் செய்யப்படாமை, பொருள்கள் தட்டுப்பாடு, களஞ்சிய வசதியின்மை, போக்குவரத்துப் பாதைகள் சீர்கேடு போன்ற பிரச்சினைகள் இந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

(இ-5)

## எரிகாயத்தால் மரணம்

வீடு தீப்பற்றிய வேளை அதனை அணைக்க முற்பட்டவர் எரிகாயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

வல்வெட்டித்துறை கொற்றாவத்தையில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான நடராசா நாகேஸ்வரன் (வயது 30) என்பவரே மரணமானவராவார்.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இத் தீவிபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் கடந்த 18 ஆம் திகதி அங்கு மரணமானார் (இ-15)

## பாடசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 18

இருபாலை கிழக்கு வசந்தபுரம் கிராம விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தினரால் அமைக்கப்பட்ட "வசந்த நிலா" பாலர் பாடசாலை திறப்பு விழா இன்று புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு மேற்படி சனசமூக நிலையத் தலைவர் நா. அப்புத்துரை தலைமையில் நடைபெறும்.

[இ-4]

## நாவாந்துறை மீன் சந்தை

யாழ்ப்பாணம், பெப். 18

நாவாந்துறை மீன் சந்தை மீண்டும் பழைய இடத்தில் நடைபெற்று வருகிறது. இடம் பெயர்வின் பின் இயங்காதிருந்த இந்த மீன் சந்தை யாழ். மாநகர சபையினரால் புனரமைக்கப்பட்டு 15 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. (இ-4)

## அனுமதி இன்றி நிதி சேகரிப்பு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் புனரமைப்புப் பணிகளுக்கு என்று கூறி சிலர் நிதி சேகரிப்பதாகவும் —

ஆலய புனரமைப்புப் பணிகளுக்கென நிதி சேகரிக்க எவரையும் அறங்காவலர் சபை அனுமதிக்கவில்லை எனவும் —

பொதுமக்கள் இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறும் — ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவலர் சபைத் தலைவரும் வேலணை பிரதேச செயலருமான ... கூறினார்.

(இ-103)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் சின்னவன் கந்தையா

மலர்வு: 17 — 07 — 1917

உதிர்வு: 19 — 01 — 1998

ஆத்மசாந்திக் கிரியைகள் (சபிண்டீகரணம்) 18-02-98 இன்று கொடிகாமம் கொயிலாமனையில் உள்ள எமது இல்லத்தில் இடம்பெறும். ஆதலால் அன்னாரின் ஆத்மசாந்திக்கிரியையில் பங்குபற்றிக் கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்று சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொடிகாமம். (53436)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறிமா புறோயிலர் ஒரு நாள் குஞ்சுகள் 19 ஆம் திகதிக்கு முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும், இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Lucky Farm Sales Centre. Palaly Road, Thirunelvely.
[53446]

### விற்பனையாகின்றன

ஆண்டு — 6 அவதானிப்பு பத்திரம்மாணவர்முன்னேற்ற அறிக்கை, General/Special Paper of Attorney, உறுதிப் படிவங்கள் என்பனவற்றை ஜெ. சுதா, (J S. T.) கோட்டடி, சாவகச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.
[சி/2899]

### உடன் விற்பனை

ஜமுனாபபாறி கலப்பு இன பால் ஆடும் (1 போத்தல் பால்) 14 நாள்கள் சென்ற கொமோறி இன மறிக் குட்டியும் விற்பனைக்கு உண்டு. வளர்ப்பதற்கு மிகத் தரமானவை. மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். S R இராஜசிங்கம், தபாற்கந்தோர் ஒழுங்கை, உரும்பிராய்.
[53423]

### தவறிவிட்டது

சிவராசா சிவசேகர் என்பவரது விசேட அடையாள அட்டை (0902034482) நல்லூருக்கும், முடமாவடிக்கும் இடையில் 15 - 2 - 98 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'கரன் ரெக்ஸ்' இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.
[53444]

12/5, வைமன் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நித்தியானந்தன் ஜெயதர்சினி என்பவரது விசேட அடையாள அட்டை நல்லூர் பிரதேசத்திற்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நியூகல்யாணி நகையகம், 87, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.
(53437)

### வாத்தியக்கருவி

வாத்தியக் கருவிகளைத் திருத்துவதற்கு நீண்டகால அனுபவம் மிக்கவர்கள் இராஜன் இசையகம், 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். கருவிகளுக்கான கம்பிகளும் Partsகளும் பெற்றுக் கொள்ளலாம். (53442)

### இலகு திருமண சேவை

21 வயது ஆசிரியம், செவ்வாய் 7, இரகபாவம் 70, மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை வெளிநாடும் ஏற்கப்படும். சகல தரங்களிலும் மணமக்கள் உள்நாடு வெளிநாடு உண்டு. தொடர்பு: ஞாயிறு காலை. துரை விமலா 958/8, K K,S, வீதி, யாழ்.நாச்சிமார் கோயிலடி.
(53447)

### திருமண சேவை

எம்மிடம புலம்பெயர்நாடு, உள்நாட்டு ஆண், பெண் ஜாதகங்கள் உண்டு. தொடர்பு கொள்ளவும்: சுவாமியார் இராசகுலசிங்கம், விநாயக திருமண சேவை. 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(53448)

### ENGLISH EXAMS

For Part time English Teacher G. A Q year nine Literature O/L Distinction, Credit Results and Spoken English by B Sc London, Inter Teacher 85, Sivankoviladi (Behind Sivan Temple) Thirunelveli
(53430)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 03 — 1964



மறைவு: 01 — 03 — 1997

### கிருஷ்ணர் பேரம்பலம் (குப்பு)

(பிரபல தேங்காய் வியாபாரி)

திதி:- 18 – 02 – 98

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவலைகள்
நெஞ்சில் வந்து மோதும்.
பாரை விட்டு நீங்கள் பிரிந்தாலும்
இதய தெய்வமே நீங்கள்
ஊட்டிய பாசம் நெஞ்சில் அழியாது
எப்போது ஊரை விட்டு
உறவை விட்டு பிரிந்து சென்றீர்கள்
எங்களின் இதய ஊரில் இன்றும்
என்றும் வாழ்கிறீர்கள்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி:- பே. கிருஸ்ணவேணி
மக்கள்:- பே. மயூரி, பே. மயூரன்,
பே. செந்தூரன்,
உற்றார், உறவினர்.

தகவல்:-
இ. பேரின்பநாதன் (அண்ணா) (53443)

## நீங்கா நினைவில் முப்பத்தொன்றாம் நாள்



### அமரர் இராசையா இரத்தினசிங்கம்

(ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரி)

குடும்பம் மகிழ: 09 – 05 – 1929

குடும்பம் கதற 18 – 01 – 1998

ஆசை கொண்டு பிள்ளைகளைக் காணவென்று
ஆவலோடு விடுவிட்டு கொழும்பு வந்தோம்
கடுகதியில் எம்மைக் கதற வைத்து
பொய்யான வாழ்விதென்று இம்மண்ணைவிட்டு
மெய்யான வாழ்வு பெற விண்ணுக்குச் சென்றீரோ?
பப்பா! உங்கள் அன்பொழுகும் வதனமெங்கே?
அணைக்கும் கரங்களெங்கே, ஆறுதல் கூறும்
குரலெங்கே தவிக்கின்றோம் நாமிங்கே
எங்கே நாம் சென்றாலும் எத்தனை நாள் ஆனாலும்
யார்தான் ஆறுதல் சொன்னாலும் ஆறாது எம் துயரம்
வற்றாது எம் கண்ணீர் பப்பா ஆண்டுகள் பல
சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை
விட்டகலாது.

ஆண்டவன் அடியில் நீங்களிருந்து எம்மை
வழிநடத்திடுங்கள் எமக்காக இறைவனிடம்
வேண்டிடுவீர்.

எமதருமைப் பப்பாவின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு எம்மை ஆறுதல் படுத்தியவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம், பக்ஸ் மூலம் எம் கவலையில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனம் நிறைந்தநன்றியைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

பப்பாவின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, ஆசைப்பிள்ளைகள்,
நேசமருமக்கள், அருமைத்தங்கை,
அன்புப் பேரக்குழந்தைகள்.

H.A அருள்ஞானம்
இல. 15 கண்டிறோட்,
யாழ்ப்பாணம். (53396)

வைத்திய சேவைக்குப் பெருமை சேர்க்கும் தன்னலமற்ற சேவையாளன்

## பளை அரசினர் வைத்தியசாலை

பொறுப்பதிகாரி

## டாக்டர் ச. அம்பிகைபாகன்

தனது சொந்த வாழ்வையும் துச்சமென நினைத்து இன்னலுறும் மக்களுக்கு உதவ வேண்டும் எனும் நோக்கில் தனது கடமையை ஆரம்பித்து பல இடங்களிலும் சிறப்புறச் சேவை செய்து கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக பளைப்பிரதேச மக்களுக்கும் அயற்பிரதேச மக்களுக்கும் அயராது சேவை செய்து கொண்டிருக்கும் டாக்டர் ச. அம்பிகைபாகன் அவர்களது சேவையை கூறிப்புகழ்ந்திட வார்த்தைகள் போதாது.

தனது பணியால் வைத்திய சேவைக்கே பெருமை சேர்க்கும் அன்னாருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடன் அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்கு உறுதுணையாக இருப்பதுமே ஆகும். இந் நிலையில் இன்று அவருக்கு பளை வைத்திய சாலை அபிவிருத்திச் சபையினர் பளை பிரதேச மக்களுடன் இணைந்து நடத்த உள்ள பாராட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

இடம்: பளை மத்திய கல்லூரி
காலம்: 1998, 02. 18 புதன்கிழமை
பிற்பகல் 2—30 மணி (புதியநேரம்)

பளை வைத்தியசாலை
அபிவிருத்திச் சபை;

1998—02—18 (சி-2901)

1971—1976க்கு இடைப்பட்ட காலத்தில்

### பட்டதாரிப் பயிலுனர்

திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற
அலுவலர்களுக்கு அமைப்பொன்றை
உருவாக்குவதற்கான

## ஆரம்ப கூட்டம்

மேற்படி திட்டத்தின் கீழ் நியமனம் பெற்றவர்களில் ஒரு பகுதியினர் புறக்கணிக்கப்பட்டு பாரபட்சத்துடன் நடத்தப்படுவதை சம்பந்தப்பட்ட அனைவரும் அறிவீர்கள். முக்கியமாக அண்மையில் வெளியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 2/97 (111) இல் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எமக்கென ஓர் அமைப்பை உருவாக்குவது அவசியமாகும்.

எனவே, எதிர்வரும் 28—02—98 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். வைமன் வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள ஆரம்பக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்

க. தியாகராசா எம். ஏ.,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

[53427]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 06 — 03 — 1943



உதிர்வு: 19 — 01 — 1998

### அமரர் பொன்னம்பலம் நவநாதன்

(கலால் உத்தியோகத்தர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

எமது குடும்பத் தலைவனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
சகோதரன், சகோதரி.

12 (80) செம்மணி ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம். (53365)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில் செயற்படுத்தப்பட உள்ள

# ஐ.நா. அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி கொழும்பில் ஆய்வுப்பட்டறை

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாவட்டத்தில் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு மேற்கொள்ள விருக்கும் திட்டங்கள் குறித்து ஆய்வுப்பட்டறை ஒன்று கொழும்பில் கடந்த வாரம் நடந்தது.

யாழ். மாவட்டத்துக்கு பல தடவைகள் விஜயம் மேற்கொண்ட ஐ. நா. அபிவிருத்தி திட்ட அதிகாரிகள் பல்வேறு திணைக்களத் தலைவர்களையும் சந்தித்து திட்டங்களைத்தயாரித்துள்ளனர்.

இத்திட்டங்கள் தொடர்பாகவே ஆய்வுப்பட்டறை நடந்தது.

நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடந்த இந்த ஆய்வுப்பட்டறையில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மற்றும் புனர்வாழ்வுத்திட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மூன்று தினங்கள் நடந்த ஆய்வுப்பட்டறையில் ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள திட்டங்களின் பலாபலன் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இத்திட்டங்கள் அதன் தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டு 3 மாதங்களில் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3-9)

## சிறுவனுக்காக இரத்தவங்கிக்கு இரத்தம் வழங்கிய படையினர்

### பலாலி தலைமையகம் தெரிவிப்பு

பலாலி. பெப். 18

படையினரின் வாகனத்தினால் மோதுண்டு காயமடைந்த சிறுவன் ஒருவருக்கு யாழ். போதனாவைத்தியசாலை இரத்தவங்கியினால் வழங்கப்பட்ட இரத்தத்துக்கு மாற்றீடாக படையினர் இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கினர்.

மேற்கண்டவாறு பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

1998 ஜனவரி 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினரின் வாகனமொன்றில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 11 வயதுடைய சிறுவனான மானக்குளம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட பிரதீபன் என்பவர் அகப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுவன் குணமடைந்து 19 ஆம் திகதி வீடு திரும்ப விரும்பிய போது வைத்தியசாலை அதிகாரிகள் அவரை வீடு செல்ல அனுமதிக்கவில்லை.

இந்தச் சிறுவன் காயமடைந்த போது, இரத்தம் தேவைப்பட்டதால் சிறுவனைக் காப்பாற்றுவதற்காக வைத்தியசாலை அதிகாரிகள் இரத்த சேமிப்பு வங்கியிலிருந்து இரத்தத்தைப் பெற்றுக் கொடுத்ததாகவும்—

இரத்த சேமிப்பு வங்கிக்கு அந்த இரத்தம் வழங்கப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டது.

சிறுவனின் ஏழ்மைத் தன்மையையும், பெற்றோரின் நலத்தையும் கருத்திற் கொண்ட 52 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி சிறுவனுக்கு வழங்கிய இரத்தத்துக்கான இரத்த சேமிப்பு வங்கிக்கு இரத்தம் வழங்கும்படி இராணுவத்தினருக்கு அறிவித்தார்.

கட்டளை அதிகாரியின் பணிப்புரைக்கமைய இராணுவ அதிகாரிகள் சிலர் சிறுவன் பிரதீபனுக்காக இரத்தத்தை இரத்த சேமிப்பு வங்கிக்கு வழங்கினர்.

சிறுவனை வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்காகவந்த இரத்த சேமிப்பு வங்கிக்கு இரத்தம் வழங்கிய இராணுவ அதிகாரிகளுக்கு பிரதீபனுடைய தாயார் நந்தாயினி சிவசிதம்பரம் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## மனைப்பொருளியல் காட்சி

பருத்தித்துறை, பெப். 18

மட்டக்களப்பு மாவட்ட கருவேப்பங்கேணி விபுலானந்தா வித்தியாலயத்தில் மனைப்பொருளியல் காட்சியும் கட்டடத் திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

பாடசாலையின் புதியகட்டடத்தைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட மேலதிகக் கல்விப்பணிப்பாளர் எஸ். எஸ். மனோகரனும், மனைப்பொருளியற் பொருட் காட்சியை மனைப் பொருளியல் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். விநாயகமணியும் திறந்து வைத்தனர்.

இவ் விழாவின் கௌரவ விருந்தினராக மண்முனை வடக்கு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இ. பொன்னம்பலம் கலந்து கொண்டார்.

[இ-118]

## மந்திகைக்கு டாக்டர்

நெல்லியடி, பெப். 18

மந்திகை மருத்துவமனைக்கு மேலும் ஒரு தென்பகுதி டாக்டர் நியமனம் பெற்றுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த டாக்டர் சந்தண பெர்னாண்டோ என்பவரே கடந்த 24 ஆம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டு இங்கு கடமையாற்றி வருகின்றார்.

(இ109)

## 13 பேருக்கு தையல் இயந்திரம்

தென்மராட்சி, பெப். 18

பளை பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பினை முடித்து வெளியேறிய இளைஞர் யுவதிகளில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 13 பேருக்கு பளை பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு மற்றும் அரச, கூட்டுறவு. நலன் விரும்பிகளால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பளை தையல் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் தையல் இயந்திரங்கள் பிரிகேடியர் சி. செனிவிரத்னவினால் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் பிரிகேடியர் ஆமியரத்ன, லெப். கேணல் விமலஸ்ரீ பளை பிரதேச செயலர் க. புத்திசிகாமணி, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ். குணாளசிங்கம், கிராமிய அபிவிருத்தி அலுவலர் ம. அழகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பளைப் பிரதேச செயலகத்தினால் கடந்த வருடம் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து தையல் இயந்திரங்கள் பளை, பெரியபளையைச் சேர்ந்த முனிஸ் துரைசிங்கம் என்பவரால் வழங்கப்பட்ட இரண்டு தையல் இயந்திரங்கள், பளையைச் சேர்ந்த சின்னத்துரை சுந்தரலிங்கம் என்பவரால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பளை பளை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் பளை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை, பளை தென்னை பயிர்ச் செய்கை சபை ஆகியவற்றால் வழங்கப்பட்ட தலா ஒவ்வொரு தையல் இயந்திரங்கள் இவற்றுள் அடங்கும்.

(இ-117)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் கஷ்டங்களுக்கு நிவாரணம் இல்லையா?

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக நாள் ஒன்றுக்கு இருமணித்தியாலங்கள் சேவையாற்ற வேண்டும் என்ற ஒப்பந்த அடிப்படையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

காலப்போக்கில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட அனைவரும் நிரந்தர ஆசிரியர்கள் போல் ஆறுமணித்தியாலங்கள் சேவையாற்ற வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டது. கல்வி அதிகாரிகளின் இத்தகைய பணிப்பைப் பின்பற்றிப் பாடாசாலைகளின் அதிபர்களும் இதை நடைமுறைப்படுத்துவதில் முனைநிற்கின்றனர்.

இதேவேளை பகுதிநேர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களும், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுமாவர். மேலதிகமாக வேலை செய்வதனால் உடல், உளரீதியாகபாதிக்கப்படும் நிலையும் ஏற்படுகின்றது. மேலதிகமாகக் கடமை புரியும் நான்கு மணித்தியாலங்களுக்கு எதுவித கொடுப்பனவும் வழங்கப்படுவதுமில்லை.

### வாசகர் திருமுகம்

ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறை இருப்பதனாலும் பாடசாலைகளில் ஆங்கிலத்தின் தரம் குறைந்து போகின்றமையாலும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் சேவையைத் தொடர்ந்து பெறுவது முக்கியமானது.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு குறித்து சுற்று நிருபம் ஒன்று திணைக்களத்துக்கு வந்தும் அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. யாழ்.குடாநாட்டைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இரண்டு மணித்தியாலங்கள் கற்பித்தல் நடைமுறை தொடர்ந்தும் தற்போது பின்பற்றப்பட்டுவருகின்றது.

எனவே பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் விடயம் குறித்து கல்வி அதிகாரிகள் உடனடியாகக் கவனம் செலுத்தி நிவாரணம் செய்ய வேண்டும்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒருவர்,

சுன்னாகம்.

## பாடசாலை விடுகைப் பத்திரம் பெறுவதற்கும் புதிய விதி உண்டா?

யாழ்ப்பாண நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றிலிருந்து பாடசாலை விடுகைப் பத்திரம் உட்பட சில ஆவணங்களைப் பெறுவதில் அப் பாடசாலையில் இருந்து விலகும் மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

பாடசாலை ஊடாக இரண்டு முறை உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அவர்களுடைய விடுகைப் பத்திரங்களை வழங்க முடியாதென குறிப்பிட்ட பாடசாலை அதிபர் கூறுகிறார். அதற்கான காரணத்தைக் கேட்ட போது இரண்டாவது முறை எழுதிய உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வந்த பின்னரே விடுகைப்பத்திரம் வழங்க முடியும் என்கிறார்.

இதனால் பல மாணவர்கள் உயர் தொழில் நுட்பக் கல்லூரியிலோ அல்லது தொழில் நுட்பக் கல்லூரியிலோ பாடநெறிகளை பயில முடியாத நிலையில் கஷ்டப்படுகின்றனர்.

உயர் தரப் பரீட்சைப் பெறுபேறு டிசெம்பரில் வெளிவந்தால் புதிய ஆண்டில் மேற்படி கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கலாம்; அதிபரின் கருத்துப் பொருத்தமாயிருக்கும். அல்லாவிடின் ஒரு வருடம் கழிந்த பின்பே குறிப்பிட்ட தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கும் வேறு பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்க முடியும் என ஊகிக்கலாம். அத்துடன் பாடசாலையிலிருந்து விடுகைப் பத்திரம் பெறுவது தொடர்பான புதிய விதிமுறைகள் எதுவும் உருவாக்கப்பட்டுள்ளனவா? உருவாக்கப் படுகின்றனவா? என்றும் அறிய வேண்டியுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட பாதிக்கப்படுகின்ற மாணவர்களுக்கு உதவ குறிப்பிட்ட பாடசாலை அதிபர் தமது கருத்தை கட்டுப்பாட்டை மீள்பரிசீலனை செய்வாரா?

தி. நடனசபேசன்

யாழ்ப்பாணம்.


**வாழ்த்துகின்றோம்**

பவள விழாக்காணும்
யா/ இளவாலை
மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை

சகல வளமும் பெற்று கல்வி ஒளி வீச எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வணங்கி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ மாதகல் ஒன்றிணைந்த பாடசாலைகள்.

(53452)



யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)
திருநெல்வேலி

**அறிவித்தல்**

எமது சங்கத்தின்
"பால் உற்பத்திகள்" பிரிவு
18 - 02 - 1998 ஆம் திகதி புதன்கிழமை
பிற்பகல் 4.00 மணி முதல் 5.00 மணி வரையுள்ள சுபவேளையில்
அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

இந்த உற்பத்திப் பிரிவின் ஊடாக நுகர்வோர் யோக்கட், ஆடை நீக்கியபால், பச்சை வெண்ணெய், நெய் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும், நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். நுகர்வோருக்குரிய மொத்தமான தேவைகளை முன் கூட்டியே அறிவித்து உதவினால் உரிய இடங்களில் விநியோகிக்கப்படும்.

— தலைவர்

(சி/2904)



**விக்னா**
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி ரோட் யாழ்.
கணக்கியல்
திரு. பாலவாசன்
A/L 98
கம்பனி
ஆரம்பம்: 21-02-98
(53424) 2 - 3 மணி



இம் மாதத்திற்குரிய
(ஆண்டு 2 — 11வரை)
பயிற்சி வினாத்தாள்களும்,
புலமைப்பரிசில் (15)
வினாத்தாள்களும் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**BOND**
யாழ். நகர்.
[5342[illegible]]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்கள் காணாமற்போதல் மட்டக்களப்பில் அதிகரிப்பு!

## ஜனாதிபதிக்கு ஜோசப் பரராஜசிங்கம் கடிதம்

மட்டக்களப்பு, பெப். 18

''மட்டக்களப்பு மாவட்டத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் இடைவிடையே கைதாகிக் காணாமற்போகும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. இச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் ஆழ்ந்த குழப்பத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இவற்றைத் தடுத்து நிறுத்த பொறுப்பும், அக்கறையுமுள்ள கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்''

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை மட்டக்களப்பு மாவட்ட எம். பியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கம் அனுப்பி வைத்துள்ள அவசர 'பக்ஸ்' கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

### விறகு பொறுக்க சென்ற இருவர் திரும்பவில்லை

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் மேற்கு பகுதியில் அமைந்துள்ள கோயில் போரைதீவு கிராமத்தில் இருந்து கடந்த 2-2-98 இல் நான்கு கிராமவாசிகள் விறகு எடுத்துவருவதற்காக தங்களது மாட்டு வண்டிகளில் வெலிகாகண்டியா கிராமத்துக்குச் சென்றனர்.

இவர்கள் 5-2-98 இல் விறகு சேகரித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இராணுவத்தினர் இவர்களில் இருவரைக் கைது செய்தனர். ஏனைய இருவரும் தப்பி வந்து சேர்ந்து விட்டனர்.

படையினரிடம் அகப்பட்ட இருவரது பெயர்களும் வருமாறு:-

1) கோயில்போரைதீவைச் சேர்ந்த 4 குழந்தைகளின் தந்தையான 40 வயதுடைய பொன்னம்பலம் தவராசா.

2) கோயில் போரைதீவு - சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த மூன்று குழந்தைகளின் தந்தையான 35 வயதுடைய ஆறுமுகம் மயில்வாகனம்.

இதுவரை இவர்கள் இருவரையும் கண்டு பிடிப்பதற்காக இவர்களது உறவினர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

அப்பகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் மற்றும் உயர் அதிகாரிகளோடு உறவினர்கள் தொடர்பு கொண்டனர். அப்படி எவரையும் கைது செய்யவில்லையென அவர்கள் கையை விரிக்கின்றனர்.

### ஏற்கனவே 3 சம்பவங்கள்

இச்சம்பவம் வெலிகாகண்டிய பகுதியில் நடைபெற்றுள்ள நாலாவது சம்பவமாகும். 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி இதே கிராமத்துக்கு விறகு சேகரிக்கச் சென்ற ஆறு அப்பாவித் தமிழ் கிராமவாசிகள் மங்கள ஓயா, மகோ ஓயா ஆகிய பொலீஸ் பகுதிகளைச் சேர்ந்த சிங்கள ஊர்காவற் படையினரால் கைது செய்யப்பட்டனர். இதுவரை இவர்களுக்கும் என்ன நடந்ததென்பது தெரியாது.

அடுத்து 20-12-95இல் இதே கிராமத்துக்கு விறகு சேகரிக்கச் சென்ற நான்கு அப்பாவி தமிழ் கிராமவாசிகள் அதே மங்கள ஓயா, மகோ ஓயா பொலீஸ் பகுதியைச் சேர்ந்த சிங்கள ஊர்காவற் படையினரால் கைது செய்யப்பட்டனர் அவர்களுக்கும் என்ன நடந்ததென்பது மர்மமாகவே உள்ளது.

கந்தையா சண்முகம், பண்டா தங்கவேல், குமரன் அப்பு செல்வநாயகம் ஆகிய உறுகாமத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் விவசாயிகள் 14-6-97 பி.ப. 2 மணியளவில் தங்கள்வயல்களுக்கு நீர்ப் பாய்ச்சுவதற்காக திறந்து விட்ட வெளிகாகண்டிய குளத்தின் நீர்ப்பாசன குழாயை மூடுவதற்காக சென்ற போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இதுவரை அவர்களுக்கும் என்ன நடந்தது என்பது தெரியாது. இச் சம்பவங்கள் எல்லாவற்றையும் நேரில் பார்வையிட்ட சாட்சிகள் உள்ளனர்.

இம் மூன்று காணாமற் போன சம்பவங்கள் தொடர்பாக தங்களுக்கு உடனடியாக 'பாக்ஸ்' மூலமும், கடிதம் மூலமும் அறிவித்ததுடன் எனது கட்சியுடன் அடிக்கடி தாங்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போதும் இவை குறித்து தங்களிடம் நேரில் முறைப்பாடு செய்துள்ளேன். அது மட்டுமன்றி நாடாளுமன்றத்திலும் இம் மூன்று சம்பவங்கள் தொடர்பாக பேசியுள்ளேன். தங்கள் அமைச்சின் பிரதி பாதுகாப்பு அமைச்சரினதும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரது நேரடிக் கவனத்துக்கும் இவற்றைக் கொண்டு வந்துள்ளேன்.

எனினும் ஊர்காவல் படையினராலும், இராணுவத்தினராலும் கைதாகி காணாமற் போனவர்களுக்கு இதுவரை என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காக தங்களால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் மிகுந்த விசனத்துடன் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

### படையினருக்கு மித மிஞ்சிய அதிகாரங்கள்

தற்போது வெலிகாகண்டிய பகுதியில் கைதாகிக் காணாமற்போனவர்களின் மொத்த எண்ணிக்கை இச் சம்பவத்துடன் 15 ஆக உயர்ந்துள்ளது.

கைதாகிக் காணாமற் போவதை குறைப்பதற்காக தாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதை மதிக்கின்ற அதே வேளையில், இவற்றை மேலும் தடுத்து நிறுத்துவதற்கான கடுமையான நடவடிக்கைகள் தங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இச் செயல்களுக்கு காரணமான பாதுகாப்பு படையினருக்கு அதிகம் அதிகாரங்களை வழங்கும் பயங்கரவாதத் தடைச் சட்டமும், அவசரகால சட்ட விதிகளும் முற்றாக அகற்றப்படல் வேண்டும் அல்லது திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.

இவ்விரு சட்டங்களும் பாதுகாப்பு படையினருக்கு வரம்பு மீறிய அதிகாரங்களை வழங்கியுள்ளன. அவர்கள் ஏதேச்சாதிகாரமாகவும், தன்னிச்சையாகவும் செயல்படவும் அதே நேரத்தில் சட்டத்தின் பிடியில் இருந்து இலகுவாக தப்பிக்கொள்ளவும் இச் சட்டங்கள் வழி செய்கின்றன.

### சமாதான முயற்சிக்கு ஊறு விளைவிக்கும்

இது போன்ற செயல்கள் நாட்டின் ஜனநாயக கொள்கைகளை முற்றாக நசுக்குவதுடன், ஒருசீரான சமூகத்தின் செயல்பாடுகளை அவமதிப்பது மட்டுமன்றி தாங்கள் மேற்கொண்டுவரும்சமாதான முயற்சிகளுக்கும் தமிழ்மக்களின் நல்லெண்ணத்தை வென்றெடுக்கும் முயற்சிகளுக்கும் குந்தகம் ஏற்படுத்துகின்றன.

எனவே இதுபோன்ற மிருகத்தனமான செயல்களைத் தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும்—

இச்சம்பவங்களில் கைதாகி காணாமற்போன குடும்பத் தலைவர்களின் குடும்பங்க[illegible] நஷ்ட ஈடுகளை வழங்க [illegible] பணிப்புரைகள் வழங்கும்படியும்— தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பளை ஆஸ்பத்திரி நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

பளை ஆஸ்பத்திக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகின்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தின் நுணாவில், மீசாலை, வரணி, கொடிகாமம், கச்சாய், மந்துவில், மிருசுவில், எழுதுமட்டுவாள், கிளாலி, மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் வத்திராயன், தாளையடி, நாகர்கோவில், குடத்தனை, சோரன்பற்று, மாசார் ஆகிய பகுதிகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் இந்த ஆஸ்பத்திரிக்கு தினமும் சிகிச்சை பெறுவதற்கு வருவதாக ஆஸ்பத்திரி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தென்மராட்சிப் பகுதியிலிருந்து பெருமளவு நோயாளர்கள் பளை ஆஸ்பத்திரிக்கு செல்வதால் தென்மராட்சி மினிபஸ் சங்கத்தினால் மேலதிக மினிபஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தினமும் 300க்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற வருவதால் ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர்ச. அம்பிகைபாலன், டாக்டர் எஸ். திருஞானசம்பந்தர் ஆகியோர்தொடர்ந்து காலை முதல் மாலை வரை நோயாளர்களைப் பார்வையிட்டு வருகின்றனர்.

ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் நோயாளர்கள் நிறைந்து விறாந்தைகளிலும் தங்கியுள்ளதைக் காண முடிகிறது.

(இ-117)

## முற்றோதல்

கொட்டடி ஸ்ரீ வைரவர் கோயிலின் திருவாசகம் முற்றும் ஓதல் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். பிற்பகல் 2 30 மணிக்கு சமயச் சொற்பொழிவும் இடம் பெறும்.

## கேடயமும் சான்றிதழும்

கொழும்பு, பெப்.18

கடந்த 7ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சுதந்திரபொன்விழா கொண்டாட்டத்தின் போது, யாழ். மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்திக்கு யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆற்றிய சேவையைக் கௌரவித்து கேடயமும், சான்றிதழும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமானால் வழங்கப்பட்டன.

(இ-8)

## மாகாண அமைச்சினால் 4 நூல்கள் வெளியீடு

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு நான்கு புதிய நூல்களை அண்மையில் வெளியிட்டு வைத்தது.

திருகோணமலை புனித சவேரியார் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காணி அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் கே. பரமேஸ்வரன் கலந்து கொண்டார்.

இந்நூல்களின் வெளியீட்டுரையை பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம் நிகழ்த்தினார்.

வானொலிப் பெட்டியும் மற்றும் சில கதைகளும் என்ற நூலை ஜனாப் எம். வை. ராஜ்பூரும்.

கௌரிதாசன் கவிதைகள் என்ற நூலை அ. கௌரிதாசனும்.

பாட்டும் விளையாட்டும் என்னும் நூலை வெ. விநாசமூர்த்தியும்—

கஹ்ஹார் கவிதைகள் என்ற நூலை ஜனாப் ஏ. எம். அப்துல் கஹ்ஹாரும் படைத்துள்ளனர்.

இவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

இந்நூல்களுக்கான விமர்சன உரைகளை ஜெயமுருகன், நிவினன்தாசன், தாமரைத்தீவான்ஆகியோரால் வழங்கப்பட்டன. ''புலம்பெயர் இலக்கியம்'' பற்றி க. சிவரெத்தினம் உரையாற்றினார். இறுதியில் கலாசாரப் பிரிவின் பாட இணைப்பாளர் ந. நற்குணம் நன்றியுரையாற்றினார்.

(இ-118)

### தம்பலகமம் படுகொலைகள்

## பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நகரசபை மூலம் உதவி

திருகோணமலை மாவட்டம் தம்பலகமம் பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட எட்டுக் குடும்பங்களுக்கும் திருமலை நகரசபைத் தலைவர் எஸ். சூரியமூர்த்தி 35 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளார்

20 மூடை அரிசி, 2 மூடை பருப்பு, 2 மூடை சீனி மற்றும் பால்மா ஆகியவற்றை இவர் எடுத்துச் சென்று வழங்கியுள்ளார்.

அரசசார்பற்ற அமைப்புக்களும் அந்த மக்களுக்கு உதவ நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

(இ-3)

## தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

தென்மராட்சி, பெப் 18

கைதடி அறவழி நிலையத்தினால் பாடசாலையை விட்டு வெளியேறிய யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு நுணாவில் மேற்கில் உள்ள அறவழி பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அறவழி நிலையத் தலைவர் பீ. ஜீ தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சி நெறி ஆரம்ப விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிபகவான் சாயிசமித்தி தலைவர் டாக்டர் எஸ். கருணானந்தம் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைத்தார்.

இப் பயிற்சி வகுப்பில் நாற்பது யுவதிகள் கலந்து கொள்கின்றனர்.

(இ-117)

## மல்யுத்தப் பயிற்சி

நெல்லியடி, பெப். 18

புலோலிப் பகுதியில் மீண்டும் யோகாசன, கராட்டி, மல்யுத்த பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

புலோலி வணிகர் சங்க மண்டபத்தில் இப்பயிற்சிகள் நாளை வியாழன் மாலை 3 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

(இ-109)

## சிட்னி சங்கம் உதவி

நல்லூர் பெப். 18

ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி தமிழ்ச் சங்கம் யாழ். பல்கலைக்கழக கல்வி அபிவிருத்திக்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கும் உதவும் பொருட்டும் ரூபா இரண்டு லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ.103)


## கண்ணீர் அஞ்சலி

15.02.1998 இல் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்ட

**அமரர் நாகமுத்து சபாரெத்தினம்**

அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்ப உறுப்பினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்·இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை,

[53456]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இதுவும் அதற்குள்ளே!

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு அரசாங்கம் அவசர அவசரமாகப், பெரிய தடபுடல் செய்து, தேர்தல்களை நடத்தியது. தேர்தலுக்கான சூழ்நிலை, உகந்த நேரம் வரவில்லை என்று பல தரப்புகள் எடுத்துக் கூறியும் அரசு அதனைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

தேர்தல்கள் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இன்று பதினெட்டாம் திகதி பதவியேற்பார்கள் என்றும் அதனைத் தொடர்ந்து சபைகள் இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதற்கு வகை செய்யும் விதத்தில் ஒவ்வொரு கட்சியின் உறுப்பினர்களும் பெற்ற விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விவரம் நேற்று வரை — இப்பத்தி எழுதப்படும் வரையில் — உத்தியோகபூர்வமாக அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.

முதற்கோணல் முற்றும் கோணும் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணையாளர் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் உறுப்பினர் பட்டியல்களை அறிவித்தாலும் அவர்கள் உடனடியாகப் பதவி ஏற்கப்போவதில்லை. பலர் — அவசரத்தில் கட்சிகள் பெயர்களைப் புகுத்திய பேர்வழிகள் — தமது பதவிகளை ராஜினாமாச் செய்வர். அதன் பின்னர் அனேகமாக எல்லாக் கட்சிகளும் "தகுதியான" வேட்பாளர் பட்டியலைத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பும். அதன் பின்னரே 'உண்மையான' சபைகள் கூடி இயங்கத் தொடங்கும்.

அது ஒரு புறமிருக்க—

வலிகாமம் வடக்கு, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி தென்மேற்குப் போன்ற இடங்களில் உள்ளூராட்சி சபைகள் எவ்வாறு இயங்கப் போகின்றன என்ற கேள்வி எழுந்துள்ளது — எழுப்பப்பட்டுள்ளது.

பிரதேச சபையோ, நகர சபையோ, மாநகரசபையோ எதுவானாலும் அது இயங்குவதற்கு அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் வாழவேண்டும். ஆனால் வலி வடக்கின் பெரும் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர விரும்பிய போதிலும் அதற்கு அனுமதிவழங்கப்படவில்லை.

பச்சிலைப்பள்ளி மற்றும் வடமராட்சி தென் மேற்கு பகுதிகளில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமங்களில் உணவுப் பொருள் விநியோகம், போக்குவரத்து என்பன மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைகள் இயங்குவதற்கு இவை ஒரு வகைத் தடைகளே. இவற்றை அகற்றாமல் உள்ளூராட்சி சபைகள் எவ்வாறு தமதுபணிகளைப் பூரணமாக நிறைவேற்ற முடியும்?

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வரை மக்கள் மீளக் குடியேறித் தமது தொழில்களைச் செய்ய அனுமதிக்க வேண்டும்என்றுவலி.வடக்குப் பிரதேச சபைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஸ்ரீ பாஸ்கரன் வடபகுதி இராணுவத் தளபதியைக் கேட்டிருப்பது பொருத்தமானதும், இங்கு குறிப்பிடத்தக்கதுமாகும்.

மக்கள் குடியிருக்காத பகுதிகளில் உள்ளூராட்சி சபைகள் யாருக்குச் சேவையாற்றுவது? எதனைத் தான் அவை சாதித்துவிட முடியும்?

# குடாநாட்டின் உள்ளூராட்சி சபைகள் ஒவ்வொன்றுக்கும் 30 லட்சம் ரூபா!

கொழும்பு, பெப். 18

வடபகுதி உள்ளூராட்சிச் சபைகளுக்கு தலா 30 இலட்சம் ரூபாவை வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டின் கடந்த பல வருடங்களாக உள்ளூராட்சிச் சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இதனால் நிர்வாகத்தை நடத்துவதில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகள் நிதி நெருக்கடியை எதிர் நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் —

கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட புதிய உள்ளூராட்சி சபை நிர்வாகங்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சபை ஒவ்வொன்றுக்கும் தலா 30இலட்சம் ரூபாவைப் பெற்றுத் தரும்படி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதனையடுத்தே உள்ளூராட்சி சபை ஒவ்வொன்றுக்கும் 30 இலட்சம் ரூபாவை ஒதுக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். (உ-5-8)

## இராமகிருஷ்ண ஜெயந்தி தினம்

யாழ்ப்பாணம், பெப். 18

நாளை முற்பகல் 9 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் கல்லூரி அதிபர் து. சந்தோசம் தலைமையில் இராமகிருஷ்ண ஜெயந்தி தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஆறு. திருமுருகனின் சிறப்புரையும், கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (உ-8)

## பரீட்சை முடிவுகளில் குளறுபடி

யாழ்ப்பாணம், பெப். 18

நேற்று யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகளில் மாணவரின் மாவட்ட, தேசிய மட்ட நிலைகளில் பல்வேறு குளறுபடிகள் காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (உ)

## மேலும் அறுவருக்கு விசர்நாய் கடித்தது

வடமராட்சி, பெப். 18

பருத்தித்துறை நகரப் பகுதியில் விநாயகர் முதலியார் வீதியிலும்கடந்த திங்களன்று ஒரு சிறுவன் உட்பட ஆறு பேர் விசர்நாய்க் கடிக்குஇலக்காகினர். இவர்கள் ஆறு பேருக்கும் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கடந்த ஏழாம் திகதியன்றும் பருத்தித்துறை நகரில் சிலர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றது தெரிந்ததே.

பருத்தித்துறை நகரில்விசர் நாய்கள் மற்றும் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. இவற்றை அழிக்க அல்லது கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (உ-173)

## நாய்களுக்கு தடுப்பூசி

சண்டிலிப்பாய், பெப். 18

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசிபோடப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் நாளை வியாழக்கிழமை அன்று மாதகல் இந்து இளைஞர் மன்றம், மாரீசன் கூடல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைக் கட்டடம் இளவாலை அரசினர் மத்திய மருந்துச் சாலை கட்டடம் ஆகிய இடங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசி போடப்பட விருப்பதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை பதில் பொறுப்பதிகாரி எஸ் ரவீந்திரன் தெரிவித்தார். (உ-185)

## ஏற்புவலியால் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 18

ஏற்புவலி நோயினால் பாதிக்கப்பட்டு கடந்த 10 ஆம்திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஏழு நாள்களின் பின் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சின்னவன் வேலாயுதம் (வயது 67) என்பவரே உயிரிழந்தவராவார். (உ-15)

## நீர்கொழும்புக் கடலில் சிப்பியின் வயிற்றுக்குள் பழைய செப்புக் காசு!

நீர்கொழும்பு, பெப்.18

அண்மையில் நீர்கொழும்பு கடல் நீரேரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் வலையில் பெரிய சிப்பி ஒன்று அகப்பட்டது. அந்தச் சிப்பியின் வயிற்றில் 127 ஆண்டுகளுக்கு முன்னர் புழக்கத்தில் இருந்த செப்பு நாணயம் ஒன்று இருக்க காணப்பட்டது.

1870 ஆம் ஆண்டில் இலங்கையில் பாவனையில் இருந்த அந்த செப்பு நாணயத்தின் ஒரு பக்கத்தில் தென்னை மரத்தின் உருவமும் மறுபுறத்தில் விக்ரோறியா மகாராணியின் உருவமும் பதிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## துப்பாக்கி வைத்திருந்த புளொட் உறுப்பினரை விடுவித்துத் தீர்ப்பு!

யாழ்ப்பாணம், பெப். 18

கைத்துப்பாக்கி வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட புளொட் உறுப்பினர் ஒருவர் யாழ். மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் க. கேசவனால் விடுவிக்கப்பட்டார்.

கடந்த திங்களன்று காலை 6.30 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஆன்டி செல்வராஜா என்பவரைப் படையினர் மறித்துசோதனை செய்த போது அவரிடம் பிறவுண் ரக 9.மீ.மீ. கைத்துப்பாக்கியும் மகசீனுடன்9 ரவைகளும் இருக்கக் காணப்பட்டதாம்.

ஆயுதங்கள் வைத்திருந்தமையால் சந்தேகங் கொண்ட படையினர் இவரைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். பொலீஸார் நேற்று இவரை யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த போது புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவரான இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட கைத்துப்பாக்கியையே வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டதுடன் புளொட் இயக்கத் தலைவர்கள் வெளியே செல்லும் போது பாதுகாப்புக்காக மட்டும் இதனை எடுத்துச் செல்லலாம் என்று யாழ். நகரில் உள்ள 512 பிரிகேட்டின் கட்டளை அதிகாரி எழுத்து மூலம் அனுமதி வழங்கியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் புளொட் தலைவர்களில் ஒருவரான எஸ். தவராஜா திருநெல்வேலி நோக்கிச் செல்லும் போது அவரது பாதுகாப்புக்கே இந்தத் துப்பாக்கி எடுத்துச் செல்லப்பட்டது என்றும் —

அப்போதே திருநெல்வேலியில் வைத்து சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட புளொட் உறுப்பினரை விடுதலை செய்த பதில் நீதிவான் வழக்கையும் முடிவுக்குக் கொண்டு வந்தார். (உ-5)

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணம் இணுவில் தம்பி இந்து வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (உ)

★ ★ ★

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் பல ஆண்டுகளாகக் கடமையாற்றிய இளைப்பாறியும், இடம் மாறிச் சென்றுமுள்ள ஆசிரியர்களான ச. கைலாசநாதன் (அதிபர்), ச. தர்மதாசன், செல்வி ஆ. மாலினி, செ. அகிலன் அ. தயாநிதி ஆகியோருக்கு இன்று பகல் மேற்படி வித்தியாலயத்தில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றுகூடி அதிபர் மா. நாகேந்திரசீலன் தலைமையில் பிரிவுபசார விழா நடத்த உள்ளனர். (உ-152)

★ ★ ★

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய கனிஷ்ட பிரிவு மெய்வன்மைப்போட்டி இன்றுபிற்பகல் 2-00மணிக்கு வித்தியாலய அதிபர் கா. நடராசா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக சங்கானை கல்விக் கோட்ட கல்வி அதிகாரி க. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினராக பண்டிதர் ப. இராசகுரு தம்பதிகளும் கலந்து கொள்வர். (உ-28)

★ ★ ★

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பால் உற்பத்திப் பொருள்கள் பகுதி ஒன்று இன்று பிற்பகல் 4-00 மணிக்கு திருநெல்வேலி கலாசாலை வீதியில் திறந்து வைக்கப்பட உள்ளது. (உ-9)

## தேநீர் அருந்திய பின் மயக்கம்

சுழிபுரம், பெப். 18

பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள பராமரிப்பு விடுதி ஒன்றைச் சேர்ந்த சிறுவர்கள் தேநீர் அருந்திய பின்னர் மயக்க முற்றனர்.

மயக்கமுற்ற சிறுவர்கள் அனைவரும் உடன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதால் சில மணி நேரத்தில் குணமடைந்தனர்.

இவர்கள் அருந்திய தேநீர் தயாரிக்கப்பட்ட பாத்திரத்தில் எலி ஒன்று இறந்து கிடந்ததாகவும் பாசாணம் அருந்திய பின்னரே அந்த எலி இறந்திருக்க வேண்டும் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

தேநீர் தயாரித்தவரின் கவனக் குறைவால் மாணவர்கள் இவ்வாறு மயக்கமடைந்தனர் எனக் கூறப்படுகிறது. (அ-28)

## நாளை

மாசி 7

வியாழக்கிழமை

திதி: அட்டமி வைகறை 6.06 வரை.

நட்சத்திரம்: விசாகம் முற்பகல் 10.55 வரை.

சுபநேரம்: 8.02-9.32

ராகுகாலம்: 2.02-3.32

(பகலுக்கும் இரவுக்கும் [illegible])

## கல்வி ஆளணியினருக்கு ரூபா 1000 விசேட முற்பணம்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட முற்பணக் கொடுப்பனவான ஆயிரம் ரூபா பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஊழியர்கள் அனைவருக்கும் இம்மாதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி முற்பணத்தைப் பெற விரும்பும் அதிபர்கள், ஆசிரியர்கள் ஊழியர்கள் தங்கள் விண்ணப்பங்களை அதிபர்கள் ஊடாக சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகங்களில் உடன் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இக்கொடுப்பனவு இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாகச் செய்யப்படவேண்டும் என்பதால் விண்ணப்பங்களை உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி யாழ்ப்பாணம், நல்லூர் வேலணை, ஊர்காவற்றுறை கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் கேட்டுள்ளார். (உ)

## அதிபர்கள் கூட்டம்

வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம்ஒன்று வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என யாழ். வலயம் 1 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## முறைப்பாடு

காரைநகர் மல்லிகைப் பகுதியில் நேற்று முன்தினம் சோதனை நடவடிக்கை என்ற பெயரில் சென்ற கடற்படைச் சிப்பாய் ஒருவர் அங்கு வீடொன்றில் இருந்த வயோதிப மாதுவின் கையைப் பிடித்து இழுத்ததாகவும் —

வயோதிப மாது கூக்குரலிடவே சிப்பாய் ஓடிவிட்டதாகவும் —

ஈ. பி. டி. பி. யினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே சமயம் —

நெடுந்தீவில் ஈ. பி. டி. பி. யின் ஆதரவாளர் ஒருவர் கடற்படையினரால் நையப் புடைக்கப்பட்டுள்ளார்.

எழுவைதீவிலும் சிலர் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவரை...

(முதலாம் பக்கத் தொடர்)
மனித கேடயமாகப் பயன் படுத்திக் கொண்டு முப்பது முதல் நாற்பது புலிகள் துருப்புகளை நோக்கி முன்னேறி வருவதையும் துருப்புக்கள் கண்டனர்.

பாடசாலைச் சிறுவர்கள் முன்னணியில் இருந்ததால் புலிகள் மீது துருப்புகளால் சுடமுடியவில்லை. அதனால் பின்வாங்க முடிவு செய்யப்பட்டது. அவ்வேளையில் புலிகள் துருப்புக்களைச் சுற்றி வளைத்து மூன்று பக்கங்களிலிருந்தும் சுட்டனர்.

இதே காரணத்தால் துருப்புக்கள் பீரங்கிகளையோ, மோட்டார்களையோ பயன்படுத்த முடியவில்லை. என்றாலும் ஆங்காங்கு மாணவர்களில் இருந்து விலகி நின்ற புலிகளை சிறு ஆயுதங்கள் கொண்டு படையினரால் தாக்க முடிந்தது.

அந்தச் சண்டையில் ஓர் அதிகாரியும் ஆறு சிப்பாய்களும் உயிரிழந்தனர்; நான்கு சிப்பாய்கள் காயமடைந்தனர். ரி 56 ரக றைபிள்கள் நான்கும், ஒரு எல். எம். ஜியையும், ஒரு தொலைத்தொடர்புக் கருவியும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

பின்னர் அப்பகுதியில் நடத்திய தேடுதலின்போது புலிகளின் சடலம் ஒன்றையும் ஒரு ஆர். பி. ஜி. ஆயுதத்தையும் படையினர் கண்டு பிடித்தனர். உயிரிழந்த புலிகளின் உறுப்பினர் கலியுகன் மாஸ்டர் என அடையாளம்காணப் பட்டுள்ளது. (உ-)

## மிருசுவில்...

(முதலாம் பக்கத் தொடர்)
இம்மோதலில் இரு புலிகள் களப்பலியாகியுள்ளதாகவும் அது அறிவித்தது.

வீரவேங்கை கலியுகன் (வேலாயுதம் அண்ணாத்துரை—புதுக்குடியிருப்பு வீதி, கனகராயன்குளம்), வீரவேங்கை வெடிவேந்தன் (தட்சணாமூர்த்தி மகேஸ்வரன்—யாழ்ப்பாணம்) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

இத்தாக்குதலில் ஏ. கே. எல். எம். ஜி —1, ஏ. கே. எல். எம். ஜி. லிங் —04, ரி-56 இரண்டு ரகத் துப்பாக்கிகள்—05, ரி-56 பட் ரகத் துப்பாக்கி—01, ஏ கே. மகஸீன்—06, குண்டுகள் —08, மகஸீன் செற்—01 ஆகிய இராணுவத் தளபாடங்களை புலிகள் கைப்பற்றியதாகவும் ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது. (உ-9)

## புலிப்...

(முதலாம் பக்கத் தொடர்)
ளிடம் கையளித்தனர். புலிகள் வசம் இருந்த படைச் சிப்பாயின் சடலத்தை அவர்கள் அங்கு வைத்துப் பொறுப்பேற்று வந்து படை அதிகாரிகளிடம் கையளித்தனர்.

புலிகளிடம் சடலத்தைப் பரிமாறிய இடம் குறித்து திட்டவட்டமான தகவல்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் வெளியிடவில்லையாயினும் —

அப்பகுதியில் சடலப்பரிமாற்றத்துக்காக அமைதி பேணும்படி தங்கள் விடுத்த கோரிக்கையை இருதரப்பும் கௌரவத்துடன் பேணியதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-15-139)


### யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில்

1997-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த 40 மாணவர்களினதும் பெற்றோர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு பாடசாலையில் பழைய மாணவர் சங்கம், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளைச் சந்திக்கும்படி வேண்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை)

சி/2911



### யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள்!

(யாழ்ப்பாணத்தின் வரலாறு காணாத இடம் பெயர்வின் கதை)

275 நாடகங்களும் 50 சிறுகதைகளும் வரைந்த
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
எழுதியது.

கொழும்பிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அனுப்புங்கள்.

எங்கும் கிடைக்கும். விலை: ரூபா 50-00

(53388)



### பாராட்டி வாழ்த்துகிறோம் யாழ். மத்திய கல்லூரியின்

க. பொ. த. உ/த (1997 பழைய பாடத்திட்டம்) சிறப்பு பெறுபேறுகள் பெற்ற மத்திய அன்னையின் மைந்தர்கள் நால்வரையும் பெருமையுடன் பாராட்டுவதோடு அவர்களை இந்நிலைக்காக்கிய அதிபர், ஆசிரியர்களையும், துணை ஆளணியினர் அனைவரையும் மனமார வாழ்த்துகின்றோம்.

யாழ். மத்திய கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(சி/2907)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18 - 02 - 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## கிளிநொச்சித் தாக்குதலின் போது
# 800 கிலோ வெடிமருந்துடன் வந்த கரும்புலியின் ட்ரக் வெடிக்கவில்லை

யாழ்ப்பாணம், பெப். 18

கடந்த முதலாம் இரண்டாம் திகதிகளில் கிளிநொச்சி பரந்தன், ஆனையிறவுப் பகுதிகளில் புலிகள் நடத்திய தாக்குதல்களின் போது கரும்புலி ஒருவரினால் செலுத்தி வரப்பட்ட- எண்ணூறுகிலோ வெடிமருந்தைக் கொண்ட— 'எல்வ்' வாகனம் ஒன்று தடம்புரண்டு வெடிக்காமல் போனது.

கிளிநொச்சியில் நிலை கொண்டுள்ள 543 ஆவது பிரிகேட்டின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் எச். ஏ. என். ரி. பெரேரா இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த ஞாயிறன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த பத்திரிகையாளர்களிடமே அவர் இத்தகவலைக் கூறினார்.

எண்ணூறு கிலோ வெடிமருந்துடன் கரும்புலி ஒருவர் செலுத்தி வந்த ட்ரக் கிளிநொச்சி மத்திய சந்தைப் பகுதியைத் தாண்டி வந்த நிலையில் கண்டி வீதியில் தடம் புரண்டது. ட்ரக் தடம் புரண்ட சமயம் வெடி மருந்துடன் இணைக்கப்பட்டிருந்த பட்டரிகளும் உருண்டோடி விட்டன. இதனால் அந்த ட்ரக் வெடிக்கவில்லை, படையினருக்கு ஏற்படவிருந்த இழப்புத் தவிர்க்கப்பட்டது. ட்ரக்குடன் சேர்ந்து விழுந்த கரும்புலி குண்டை வெடிக்க வைக்க பலமுறை முயற்சித்தும் அது பலனளிக்காமல் போகவே சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

கிளிநொச்சி தண்ணீர்தாங்கி அருகே இச் சம்பவம் இடம் பெற்றது.

— இவ்வாறு பிரிகேடியர் பெரேரா மேலும் தெரிவித்தார்.

(உ-9-8)

## குடாநாட்டில்..

(முதலாம் பக்கத் தொடர்)
றும் அவர் குறிப்பிட்டார்.

மிருசுவில் வடக்கில் நேற்று முன்தினம் பிற்பகல் நடந்த தாக்குதலில் முப்பது முதல் நாற்பது புலிகள் பங்குபற்றியிருப்பதாக இச்சம்பவம் தொடர்பாகப்பலாலி படைத் தலைமையகம் நேற்றுப் பிற்பகலில் விடுத்த செய்திக் குறிப்பை மேஜர் ஜெனரல் பலகல்லாவுக்கு நேற்று மாலை சுட்டிக்காட்டிய 'உதயன்' செய்தியாளர், ''படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இவ்வளவு எண்ணிக்கையான புலிகள் — அதுவும் நண்பகல் வேளையில் — ஒன்றாகத் திரண்டு வரமுடியுமானால் அது குடாநாட்டில் புலிகளின் பிரசன்னம் தொடர்பாக சில ஆணித்தரமான நிலைமையை வெளிப்படுகின்றதல்லவா?'' — என்றும் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் பலகல்ல ''அவ்வளவு எண்ணிக்கையான புலிகள் திரண்டு கூடுவதற்கான சாத்தியம் இல்லை என்றே நான் நம்புகிறேன். அப்படி நடந்திருக்க முடியாது. எனினும் சம்பவம் நடந்த இடத்தில் நின்ற துருப்புகள் வெளிப்படுத்திய தகவல்களை நான் மறைக்க விரும்பவில்லை. அதனை மாற்றாமல் அப்படியே வெளியிட வேண்டும் என்பதற்காகவே அந்த எண்ணிக்கையை அப்படியே எமது செய்திக் குறிப்பில் இடம்பெறச் செய்தேன்'' என்று விளக்கமளித்தார்.

கடந்த ஐந்து நாள்களில் மட்டும் ஐந்துக்கும் அதிகமான தாக்குதல்களை புலிகள் குடா நாட்டில் நடத்தியுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி புத்தூரில் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் ஒருவர் பலியானார்.

13 ஆம் திகதி குருநகர் பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலில் 7 படையினர் காயமடைந்தனர்.

14 ஆம் திகதி சூராவத்தையில் நடந்த தாக்குதலில் படையினர் ஒருவர் பலியானதுடன் இருவர் காயமடைந்தனர்.

15 ஆம் திகதி பண்டத்தரிப்பு மோதலில் 2 படையினர் பலியாகினர்.

16 ஆம் திகதி மிருசுவிலில் புலிகள் நடத்திய தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட 7 படையினர் பலியாகினர். (உ-9)


### சிவா திரையரங்கு

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அர்ஜுன் - சிம்ரன்
நடித்த
கொண்டாட்டம்
தினசரி:-
10-30, 2-30 மணி.
(53467)


# வாழைச்சேனையில் சுற்றிவளைப்பு தேடுதல்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை கண்ணன்புரம், கண்ணகிபுரம், விநாயகபுரம், பேத்தாளை, கல்மடு ஆகிய கிராமங்கள் இராணுவத்தினராலும் பொலீஸாராலும் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது.

பொதுமக்கள் அனைவரும் பேத்தாளையில் உள்ள ஓர் பொது இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர். 50 பேர் மேலதிக விசாரணைக்காகவாழைச்சேனை துறைமுக முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தலையாட்டி முன் நிறுத்தப்பட்டனர். ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது. (உ-9)

# தொலைபேசிச் சேவை விரைவில் சீரடையும்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர்களுக்கான தொலைபேசிச் சேவை நேற்றும் தடைப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் வேலை செய்த வெளியூர் தொலைபேசிச் சேவை நேற்றுக் காலையுடன் மீண்டும் 'செத்துப்போனது'

கடந்த சில தினங்களாக வெளியூர் தொலைபேசிச் சேவை இவ்வாறு அடிக்கடி சீர்குலைவது தெரிந்ததே.

புதிதாகப் பலருக்குத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டதை அடுத்து வெளியூர் தொலைபேசி அழைப்புகளில் நெருக்கடி ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது ஒருநேரத்தில் வெளியூரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 15 இணைப்புகள் மூலமும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூர்களுக்கு 15 இணைப்புகள் மூலமும் பேசக்கூடியதாக ஆக முப்பது 'லைன்' களே செயற்பட்டு வந்தன.

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி இணைப்புகளைப் பெற்ற வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த போது இந்த முப்பது ''லைன்'' களும் போதாது என்ற நிலை ஏற்பட்டது. இதனையடுத்து மேலும் முப்பது 'லைன்' களை யாழ்ப்பாணத்துக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த முப்பது 'லைன்' இணைப்புகள் தொடர்பான தொலைத் தொடர்புக் கோபுர வேலைகள் ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்டதாகவும் —

அந்த வேலைகளின்போதே தற்போது சேவையிலிருந்த முப்பது 'லைன்' களும் கூடக் குழம்பிப்போனதாகவும் —

விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

அடுத்தஓரிரு நாள்களுக்குள் அறுபது ''லைன்'' வசதியும் சீர்செய்யப்பட்டு விடும் என அந்த வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. (உ)

## முதல் நாள் தேர்தலில்
# 53 சதவீதத்தினரே வாக்களித்தனர்

சென்னை, பெப். 18

இந்தியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்களிப்பில் 53 சதவீத வாக்குகளே பதிவாகியுள்ளன,

பீகாரில் நட்சத்திரங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் பரவலாக வன்முறைகள் இடம்பெற்றன. வேறு சில இடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

பீகாரில் போட்டிக் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 15 பேர் இறந்துள்ளனர்.

எம்.ஸி.ஸி தீவிர வாதிகள் வைத்த நிலக்கண்ணிகள் வெடித்ததில் 8 பேர் இறந்துள்ளனர்.

200 க்கும் அதிகமான வாக்குச் சாவடிகளில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

218 வாக்குச்சாவடிகள் கைப்பற்றப்பட்டதாக பாரதீய ஜனதாக் கட்சி முறைப்பாடு செய்துள்ளது.

ஆந்திரப் பிரதேசத்திலும் அஸாமிலும் வன்முறைக் கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (இ-9)

## தட்டாதெரு..

(முதலாம் பக்கத் தொடர்)
இரண்டுசில்லு வாகனங்களும் இப்பாதையூடாக நகரில் இருந்து வெளியே செல்லவும் அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (உ-4-15-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org